# இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்

## MODERN TRENDS IN EDUCATION IN SRILANKA



ஆ. நித்திலவர்ணன்

உ
00959
த்தி

# இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்

(கல்வியியல் கட்டுரைகளின் தொகுப்பு)




200227

8418 C.C

200227 C.C

ஆ. நித்திலவர்ணன்

*BSc with Education (Hons), MEd*

தக்ஷனா வெளியீடு

-6 OCT 2008

## நூற் குறிப்பு

நூல் : இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்
(கல்வியியல் கட்டுரைகளின் தொகுப்பு)

ஆசிரியர் : திரு. ஆனந்தமயில் நித்திலவர்ணன்

பதிப்புரிமை : திருமதி நிஷாந்தினி நித்திலவர்ணன்

முகவரி : இலக்கம் 10, வளாகவீதி, திருநெல்வேலி.

மின்னஞ்சல் : anithlavarnan@gmail.com

முதற் பதிப்பு : ஜூலை - 2008

அளவு : A5

பக்கங்கள் : VIII + 65

பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்,
39/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 150/-



371 0095493



Title : *Modern trends in Education in Srilanka*
*(A Collection of Educational Articles)*

Author : Mr. Ananthamyl Nithlavarnan

Copyright : Mrs. Nishanthini Nithlavarnan

Address : No. 10. Campus Lane, Thirunelvely, Jaffna.

E-mail : anithlavarnan@gmail.com

First edition : July- 2008

Size : A5

Pages : VIII + 65

Printed at : Guru Printers,
39/2, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.

Price : Rs. 150/-




## சமர்ப்பணம்

என் முன்னறி தெய்வங்களாகிய மாதா பிதாவிற்கும்;

எனக்கு எழுத்தறிவித்த ஆசிரியர்களுக்கும்;

என்கல்விக் கண்களை திறந்த பள்ளிக்கூடங்களுக்கும்;

உயர்கல்வியளித்த யாழ். பல்கலைக்கழகத்திற்கும்;

நான் பணிபுரியும் கல்வியல்துறைக்கும்;

இந்நூல் சமர்ப்பணம்

– நூலாசிரியர் –

# பொருடளக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | முன்னுரை | |
| 1. | மாற்றத்திற்குள்ளாகும் போட்டிப்பரீட்சைகளும் பரீட்சார்த்திகள் விருத்தி செய்யவேண்டிய திறன்களும் | 01 |
| 2. | இலங்கையின் பல்கலைக்கழகக்கல்வியில் நவீனமாற்றங்கள் | 05 |
| 3. | தேசிய ஆற்றலையும் அபிவிருத்தியையும் அதிகரிக்க அனைவருக்கும் விஞ்ஞானக்கல்வி காலத்தின் தேவை | 16 |
| 4. | இலங்கையின் ஆசிரியர்கல்வியில் எதிர்நோக்கப்படும் சவால்கள் | 23 |
| 5. | பாடசாலைகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக்கல்வி | 31 |
| 6. | ஆசிரியர்களும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | 37 |
| 7. | கல்வித்தொழில் நுட்பமும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடும் | 42 |
| 8. | கட்டுருவாக்க கற்றல் கொள்கை | 47 |
| 9. | தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை; சில அவதானிப்புக்கள் | 55 |
| 10. | பரீட்சைக்குத் தயாராவதற்கான சில அடிப்படைக்குறிப்புக்கள் | 59 |
| 11. | கல்வி என்பது என்ன? சில நவீன சிந்தனைகள் | 63 |




# அணிந்துரை

அறிவைப்பரப்புதல் என்பது உலகமுன்னேற்றத்துக்கான முயற்சிகளில் முதன்மையானதாகும். அறிவைப்பரப்பும் முயற்சியானது பல வடிவங்களிலும் பல்வேறுபட்ட துறைகளிலும் ஏற்படுத்தப்படலாம். ஒவ்வொரு துறையிலும் அத்துறைசார் ஆளணியினர் தத்தம் ஆற்றல்களுக்கேற்ற பணிகளை மேற்கொள்ளும் போது சமூகமுன்னேற்றம் இலகுவாக ஏற்பட ஏதுவாகின்றது. இவை எல்லாவற்றுள்ளும் கல்விசார்ந்த துறைகளின் செயற்பாடுகள் ஏனைய துறைகளின் விருத்திக்கு அடிப்படையாகவும் முதன்மையாகவும் அமைந்துள்ளது.

இந்த வகையில், ஒருவருக்குக் கிடைக்கக்கூடிய கல்வி தொடர்பான தகவல்களை ஏனையோரும் அறியச்செய்தல் கல்விச் செயற்பாடுகளின் முதன்மை நோக்குகளில் ஒரு முக்கியமான விடயமாகும். இவ்வாறான தகவல்களை ஒருவர் தனது சொந்த அனுபவத்தினூடாகவும், தேடல் மூலமாகப் பெறப்படும் ஏனையோரின் அனுபவங்கள், பங்களிப்பு என்பவை ஊடாகவும் வெளிப்படுத்த முடியும். அதாவது, கல்வி அபிவிருத்தி தொடர்பான பல்வேறு கருத்துக்களையும் திரட்டி, தொகுத்து ஏனையோர்க்கு வழங்குதல் ஆசிரியப் பணியில் இணைவோரின் தலையாய கடமை எனவும் கொள்ளலாம்.

இந்த வகையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் கல்வியியற்றுறையில் உதவி விரிவுரையாளராகப் பணியை மேற்கொண்டுள்ள திரு. ஆ நித்திலவர்ணனின் கல்வி சார்ந்த செயற்பாடுகள் கவனிப்புக்குரியவை. குறிப்பாக, மிக இளம் வயதிலேயே கல்விப்புலப் பிரச்சினைகள், அபிவிருத்திப் பணிகள் என்பன பற்றி மிக வலுவான, ஆழமான சிந்தனைகளும் முயற்சிகளும் ஊக்குவிக்கப்பட வேண்டியவை. காலத்துக்குக் காலம் தனது கருத்துக்களை பத்திரிகைகளிலும் பருவ இதழ்களிலும் கட்டுரை வடிவில் வழங்கியுள்ளமை அவரது கல்விப்புலம் நாடிய நோக்கினை வெளிக்காட்டுகின்றது.

தற்போது இக்கட்டுரைகளை உரியமுறையில் தொகுத்து நூல் வடிவில் வெளியிட முன்வந்தமை வரவேற்கத்தக்கது.

ஆங்கில மொழிமூலமாக விஞ்ஞான பாடங்களையும் கல்வியியற் பாடங்களையும் ஒருங்கே கற்றுக் கொண்ட இவர், மிக நேர்த்தியாகப் பலரும் பயன்பெறும் வகையில் தமிழில் கருத்துக்களை அள்ளி வீசியமை பெருமைக்குரியது. பாராட்டுக்குரியது. இந்நூலாசிரியரின் கன்னி - முயற்சியை மெச்சும் அதேவேளை, மேன்மேலும் இவ்வாறான நன்முயற்சிகளை வெளிப்படுத்த வேண்டும். என்னும் அவாவையும் அதற்கான என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

**பேராசிரியர் க. சின்னத்தம்பி**
இணைப்பாளர்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி,
வவுனியா வளாகம், யாழ். பல்கலைக் கழகம்.
21.01.2008



## முன்னுரை

"இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்" (Modern trends in Education in Sri Lanka) என்ற எனது முதலாவது கல்வியியல் நூலினை வெளியிடுவதில் மனமகிழ்வடை கின்றேன் . காலத்துக்குக்காலம் பல்வேறு பத்திரிகைகளிலும், அகவிழி என்ற ஆசிரியத்துவநோக்கு சஞ்சிகையிலும் நான் எழுதிய பதினொரு கல்வியியல் கட்டுரைகளின் தொகுப்பாகவே இந்நூலாக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில், எனது பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த சமயத்தில், "பரீட்சைக்கு தயாராவதற்கான சில அடிப்படைக்குறிப்புக்கள்" என்ற எனது முதலாவது கல்வியியல் கட்டுரையை "உதயன்" பத்திரிகையில் எழுதியிருந்தேன்.

பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் BSc with Education பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கும், பட்டப்பின் கல்விடிப்ளோமா பயிலும் ஆசிரியர்களுக்கும் விரிவுரையாற்றும் வாய்ப்புகிடைத்ததன் பயனாக, கல்வியியல் முன்னேற்றங்கள், கல்வியில் புதிய விடயங்களின் வருகை மற்றும் பல்வேறு கல்விசார் பிரச்சினைகள் தொடர்பாக பல கட்டுரைகளை எழுதுவதற்கான உந்துதல்களும், வாய்ப்புக்களும் கிடைத்தன.

எனது கல்வியல் கட்டுரைகளை பிரசுரித்த பத்திரிகை ஆசிரியர்கள், "அகவிழி" சஞ்சிகை ஆசிரியர் தெ.மதுசூதனன் மற்றும் வாசகர்களிடமிருந்து கிடைத்த பயனுள்ள பின்னூட்டலை (Feedback) அடிப்படையாகக் கொண்டு இந்நூலை ஆக்கியுள்ளேன்.

இந்நூலுக்கு முன்னுரை மற்றும், என்னைப்பற்றிய குறிப்பு ஆகியன வழங்கிய எனது ஆசான்களும், ஆசிரிய கல்வியின் இருபெரும் தூண்களுமாகிய பேராசிரியர் க.சின்னத்தம்பி மற்றும் பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகியோருக்கு நான் சிரந்தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இந்நூலாக்கத்திற்கு ஊக்கமளித்த எனது ஆசான்களாகிய, யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையைச் சேர்ந்த துறைத்தலைவர், மற்றும் சிரேஸ்ட விரிவுரையாளர்களுக்கும் எனது மனமாந்த நன்றிகள். மேலும் இந்நூரை அழகாகப்பதிப்பித்துத் தந்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிக்குரியவர்கள். நூல் தொடர்பான பயனுள்ள விமர்சனங்களை எதிர்பார்க்கின்றேன்.

இல. 10,
வளாகவீதி,
திருநெல்வேலி,

ஆ. நித்திலவர்ணன்



200227

# 1

## மாற்றத்திற்குள்ளாகும் போட்டிப் பரீட்சைகளும் பரீட்சார்த்திகள் விருத்தி செய்ய வேண்டிய திறன்களும்

தற்காலத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில்ப் பரீட்சை, க.பொ.த. (சாதாரணம்) மற்றும் க.பொ.த.(உயர்தரம்) போன்ற பொதுப்பரீட்சைகளும் பல்வேறு நோக்கங்களுக்காக நடாத்தப்படும் போட்டிப்பரீட்சைகளும் விரைவான மாறுதல்களுக்கு உட்பட்டு வருகின்றன. இதற்கேற்ப மாணவர்களும், தேர்வுநாடிகளும் தம்மை தயார் செய்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகவுள்ளது. இப்பரீட்சைகள் பரீட்சிக்கும் திறன்களும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. அண்மைக்காலத்தில் பின்வரும் திறன்களினை உள்ளடக்கிய தாக பரீட்சைகள் அமைவதனைக் காணலாம்.

- நுண்ணறிவு / நுண்மதி
- பொது அறிவு
- கட்டுரையாக்கமும் சுருக்கி எழுதலும்
- ஆங்கில மொழியறிவு
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு
- முகாமைத்துவ உளச்சார்பு

### நுண்ணறிவு/ நுண்மதி

நுண்மதி என்பது சூழலுடன் இசைவாக்கம் பெறும் ஆற்றல், கற்கும் ஆற்றல, தர்க்க ரீதியாக நியாயம் காணுதல், தீர்மானம் எடுத்தல், பிரச்சினை தீர்த்தல், எதிர்காலப் பிரச்சினைகளை எதிர்வு கூறல், தொடர்புகளைப் பேணுதல், மற்றும் வேகமாக சிந்தித்தல் ஆகிய பண்புகளைக் கொண்டதெனக்கூறலாம். பொதுவாக

இப்பரீட்சையானது பரீட்சார்த்தி களின் தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றலையும் பகுத்தறிவுத் திறனையும் மதிப்பீடு செய்வதாக அமைகின்றது.

நுண்மதியானது ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்பானது எனினும், இதனை கடுமையான பயிற்சியின் மூலம் விருத்தி செய்து கொள்ள முடியும். நடைமுறையில் தொழில் வாய்ப்புகளுக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சைகளில் அநேகர் தோற்றுப்போக காரணம் முறையான பயிற்சியின்மையாகும். பரீட்சைக்கு விண்ணப்பித்து, பரீட்சை அனுமதியட்டை கிடைத்த பின்னரே பரீட்சைக்கு தயாரா கின்றனர். சிலர் எதுவித முன்னாதயத்தமுமின்றி பரீட்சைக்கு தோற்றி தோல்வி யடைகின்றனர். இப்பரீட்சைகளில் வெற்றிடைந்தோரின் பின்னணியை ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் கடுமையான பயிற்சி பெற்றோராகவே இருக்கின்றனர்.

தற்காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மிகச்சிறந்த கற்கை நெறிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் நுண்மதிப்பரீட்சையே நடாத்தப் படுகின்றது; அக்கற்கைநெறிகள் வருமாறு;

- கொழும்புப் பல்கலைக்கழக கணனிப் பாடசாலை, யாழ்பல்கலைக்கழக வவுனியா வளாகம் மற்றும் இராஜரட்ட பல்கலைக்கழகம் என்பவற்றால் நடத்தப்படும் தகவல் தொடர் பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு கற்கை நெறி.
- ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் வியாபார நிர்வாக பட்டப்படிப்பு கற்கைநெறி.
- களணிப்பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் "சுற்றாடல் பாதுகாப்பும் முகாமையும்" மற்றும் "பேச்சும் மொழிச்சிகிச்சையும்" பட்டப்படிப்பு கற்கை நெறிகள்.
- ஊவா வெல்லசப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பெரும்பாலான பட்டப்படிப்பு கற்கை நெறிகள்.

அத்துடன், பெரும்பாலான பட்டப்பின்படிப்பு கற்கை நெறிகளுக்கான மாணவர் அனுமதியிலும் நுண்ணறிவுப் பரீட்சை முக்கிய இடம் வசிக்கின்றது. இவற்றின் மூலம் அனைத்து வயதினரும் நுண்ணறிவினை விருத்தி செய்து கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

## பொது அறிவு

ஐந்தாம் தரப்புமைப்பரிசில் பரீட்சை, கா.பொ.தர உயர்தரப் பரீட்சை மற்றும் பெரும்பாலான போட்டிப் பரீட்சைகளிலும் பொது அறிவுத்திறன் முக்கிய இடம் பெறுகின்றது. இலங்கையின் அரசியல், சமூக, கலாசார, பொருளாதார சூழ்நிலை பற்றியும், சமகால தேசிய மற்றும் சர்வதேச விவகாரங்கள் பற்றியும், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் பரீட்சிப்பதாகவே இவ்வினாத்தாள் அமையும்.

நல்ல வாசிப்பு இருந்தால் பொது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். தினமும் பத்திரிகை வாசித்தலை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்;



அதிலுள்ள கல்வி, பொது அறிவுசார் செய்திகளின் நறுக்குகளைச் சேகரித்து கோவைப்படுத்திக் கொள்ள வேண்டும்; வானொலிச் செய்திகளை தினமும் செவிமடுக்க வேண்டும்; தொலைக் காட்சியில் கல்விசார் பயனுள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும்; இணைய வசதியுள்ளவர்கள் தினமும் நடைபெறும் முக்கிய, தேவையான விடயங்களினை பதிவிறக்கம் செய்து சேமித்துக் கொள்ள வேண்டும். இவற்றின் மூலம் பொதுஅறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

## கட்டுரையாக்கமும் சுருக்கி எழுதலும்

குறிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் பற்றிக் கட்டுரை ஒன்று எழுதுதல் வேண்டும் என பரீட்சைகள் எதிர் பார்க்கின்றன. கட்டுரையானது ஒரு விடயதள படிப்பாக இருக்காது; சிந்தனை மற்றும் சொற்கூற்று, பொது ஆற்றல் போன்றவற்றைக் கணிக்கும் வகையில் பரீட்சார்த்தி கட்டுரை எழுத வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டுரை எழுதுவதில் சுயமான கருத்துக்களை அறிமுகப்படுத்தும் திறமை; சுய ஆக்கம்; மொழி நடை என்பன கணிப்பிடப்படும். கட்டுரையானது தெளிவாகவும் பிழைகள் இன்றியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

தரப்பட்ட பந்தியின் கருத்தை கிரகித்து அதனைத் திறமையாகவும் சுருக்கமாகவும் வெளிப்படுத்துவதற்குப் பரீட்சார்த்திக்குள்ள திறமையை பரீட்சிக்கும் நோக்கில் ஒவ்வொரு பரீட்சையும் சுருக்கி எழுதல் என்ற பகுதியையும் கொண்டுள்ளன. கட்டுரை எழுதுதல் மற்றும் சுருக்கி எழுதுதல் ஆகிய ஆற்றலை விருத்தி செய்ய வேண்டுமானால் சிறந்த வாசிப்பு இன்றியமையாதது. இலக்கிய கர்த்தாக்களால் சிறந்த கட்டுரைகளைப் படைக்க முடியும். தரப்பட்ட பந்தியின் சுருக்கத்தை செம்மையாகவும் எழுத முடியும். நடைமுறையில் அவதானித் தோமேயானால் நிர்வாக சேவை அதிகாரிகளும், கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளும் சிறந்த எழுத்தாளர்களாகவும் இருக்கிறார்கள்.

## ஆங்கில மொழியறிவு

உலகமயமாக்கலின் விளைவாக அனைவரும் கட்டாயமாக ஆங்கில மொழி யறிவிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவியலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடக்கம் க.பொ.த உயர்தரப் பரீட்சைவரை ஆங்கில மொழியறிவு முக்கி யத்துவம் பெறுகின்றது. மிகவிரைவில் க.பொ.த உயர்தர பரீட்சையில் ஆங்கில மொழியறிவிலும் சித்தியடைந்தால் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் என்ற நிலைமை வரலாம். தற்பொழுது சில பதவிநிலைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் ஆங்கிலமொழி அறிவும் பரீட்சிக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக நடத்தப்படும் பரீட்சிக்கப்படலாம். இதனை உணர்ந்து, அனைவரும் இப்பொழுதிருந்தே தயாராக வேண்டும்.

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு

தற்கால உலகில் கணனி அறிவியல் பாண்டித்தியமுள்ளவர்கள் பிறரால் மதிக்கப் படுகின்றனர். கணனி அறிவைப் பெற்றிராதவர்களை நவீன கல்வியுலகு ஒதுக்கத் தொடங்கியுள்ளது. முன்பள்ளி தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கணனிக்கல்வி முக்கியத்தும் பெற்று விளக்குவதுடன், கல்விக்கான கருவியாகவும் கணனி செயற்படுகின்றது. காலமாற்றத்தை உள்வாங்கிய அரசும், தனியாரும் தமக்கான ஆளணியினரை தெரிவு செய்யும் போது தகவல் தொடர் பாடல் தொழில்நுட்ப அறிவையும் பரீட்சிக்கின்றனர். "கணனித் தரவு இயக்குநர்" (Data Entry Operator) போன்ற கணனி அறிவுடன் தொடர்புடைய பல்வேறு பதவிகள் உருவாக்கப்பட்டுமுள்ளன. தற்காலத்தில் சொந்தக் கணனி (Personal Computer) வைத்திருப்பது என்பது அறிவார்ந்த மனிதனுக்கான ஒரு குறிகாட்டி யாகவும் கருதப்படுகின்றது. காலமாற்றத்துடன் நாமும் இனைந்து செல்ல வேண்டுமானால் கணனி அறிவு பெற வேண்டும்.

## முகாமைத்துவ உளச்சார்பு

2008 ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையில் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்ட பகுதியாகும். இப்பரீட்சை மூலம் பரீட்சார்த்தியின் சிறந்த முகாமைத்துவத் திறன்கள் மதிப்பிடப்படுகின்றது. அதாவது பிரச்சினைகளையும் அவற்றிற்கான காரணங்களையும் இனங்காணுதல், தீர்மானமெடுத்தல், நபர்களிடையிலான தொடர்புகளை நடத்திச் செல்லல், தொடர்புத்துறைகளிலான திறமை, சுய ஒழுக்கம், கொள்கை மற்றும் உபாயவழிமுறைகளை தயாரித்தல் ஆகிய திறன்கள் பரீட்சிக்கப்படுகின்றது; புதியகல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் முகாமைத்துவத் திறன்களும் கற்பிக்கப்படுகின்றது.

## நேர்முகப்பரீட்சை

பரீட்சார்த்திகளுடன் பொதுவான விடயங்களில் நேர்முக உரையாடலின் ஊடாக குறிப்பிட்ட திறன்கள் பரீட்சிக்கப்படும். இத்தகைய மதீப்பிட்டின்போது விவேகம், மன விழிப்பு, தோற்றம், ஆளுமைத்தகைமை, மொழியறிவு மற்றும் கணனிப் பிரயோக சாத்தியம் என்பன கருத்தில் கொள்ளப்படும். இவற்றிற்கேற்ப தேர்வு நாடிகள் தம்மைத்தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டும்.

போட்டியும் சவாலும் நிறைந்த இவ்வுலகில் நாம் வெற்றியடைய வேண்டு மானால்; மதிப்பார்ந்த தொழிலொன்றைப் பெற வேண்டுமானால்; சிறந்த உயர் கல்வியைப்பெற வேண்டுமானல் காலமாற்றத்துக்கேற்ப எம்மைமாற்றிக் கொள்ள வேண்டும். பரீட்சைகள் பரீட்சிக்கும் திறன்களினை வளர்த்துக் கொள்வதனூடு அப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும். ■

*உதயன்*
*25.03.2008*



200227

# 2

# இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியில் நவீன மாற்றங்கள்

இன்றைய உலகமயமாக்கப்பட்ட சூழலில் முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு உயர்கல்வி பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. சமூகத்திலும், விஞ்ஞான தொழில்நுட்ப பிரயோக ஆராய்ச்சியிலும் சமூகத்தின் பொருளாதார மற்றும் தொழில் வாய்ப்பிலும் உயர்கல்வி ஒரு பிரதான பங்களிப்பைச்செய்யவேண்டியுள்ளது.

மனித உரிமைகள், ஜனநாயகம், பண்பாட்டு மேம்பாடு என்பவற்றிலும் உயர்கல்வியின் பங்களிப்பு பெரிதும் வேண்டப்படுகின்றது. பல்கலைக் கழகக்கல்வியும் ஆராய்ச்சியும் சமூகமேம்பாட்டுடன் தொடர்புள்ள முறையில் அமைதல் வேண்டுமென்றும் நாட்டின் சமூக, கலாசார வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி பன்மைத்துவமுடைய சமூக ஒழுங்கின் கட்டமைப்புக்கு உதவ வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

சுருங்கக்கூறின் நவீன உயர்கல்வியானது சமூகமேம்பாடு மற்றும் சமூக விடுதலைக்கான ஒரு பிரதான கருவியாக கொள்கை வகுப்பாளர்களால் கருத்தாக்கம் செய்யப் படுகின்றது. மாறிவரும் உலகத்திற்கேற்ப பல்கலைக் கழகங்கள் காலத்தோடு இணைந்து செயற்படவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

உலகமயமாக்கலின் விளைவாக, சர்வதேசசந்தையில் தரமான மனிதவளத்தை வழங்கவேண்டிய தேவை இலங்கை பல்கலைக்கழகங்களின் முன்னுள்ள பாரிய சவாலாகும். இலங்கையின் உயர்கல்வித்துறையில் அண்மைக்காலமாக பலமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

1) புதிய பல்கலைக்கழகங்களின் தோற்றமும் ஏனைய பல்கலைக்கழகங்களில் புதிய பீடங்களின் உருவாக்கமும்.
2) இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல சர்வதேசதரத்திலான புதியகற்கை நெறிகளின் உருவாக்கம்.
3) இலங்கையின் பல்கலைக்கழகக்கல்வியில் புதிய சீர்திருத்தங்களின் உருவாக்கம்.
4) தெற்காசிய பல்கலைக்கழகத்தின் தோற்றுவாய்க்கான முன்முயற்சிகளும், இலங்கை மாணவர்களுக்கான கல்விவாய்ப்பும்.
5) உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிப்பும், மாணவர் நலமேம்பாடும்.
6) பல்கலைக்கழககல்வியில் பண்புரீதியான மேம்பாட்டைக்காணல்.
7) தனியார் பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்களின் தோற்ற முனைப்புக்கள்.
8) இலங்கை மாணவர்களது சர்வதேசபல்கலைக்கழகங்களை நோக்கியதான ஆர்வம்.

இக்கட்டுரையானது இலங்கையின் உயர்கல்வித்துறையில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் மேற்கூறப்பட்ட விடயங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது.

## புதிய பல்கலைக்கழகங்களின் தோற்றம்

இலங்கையின் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட 13 தேசிய பல்கலைக்கழகங்கள் நான்கு நிறுவனங்களுக்கு மேலதிகமாக 2005 ஆம் ஆண்டு மேலும் இரு புதிய பல்கலைக்கழகங்களும் 2007 ஆம் ஆண்டு ஒரு புதிய பல்கலைக்கழகமும் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டன.

1. ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (University of Uva wellasa)
2. கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் (University of Visual Performing Arts)
3. 2007 ஆம் ஆண்டு சேர் ஜோன் கொத்தலாவல இராணுவப்பயிற்சிக்கல்லூரி சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகமாக (Sir John Kotelawela Defense University) மாற்றப்பட்டது.



### ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (University of Uva wellasa)

07-08-2005 அன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவால் ஆரம்பித்த வைக்கப்பட்டது. மாறிவரும் உலகிற்கேற்ப புதிய கருத்துக்களை முன்னிலைப்படுத்தி செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. 2005/2006 ஆம் கல்வியாண்டு தொடக்கம், இளமாணிப்பட்டப்படிப்புக்காக மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

☞ விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (Science and Technology): பல்வேறு தொழில்துறைகளில் நிலவும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் தேவைகளை கருத்தில் கொண்டு அதுசார்ந்த அறிவை மாணவர் மத்தியில் விருத்திசெய்து, மாறிவரும் உலகிற்கு ஏற்ப உள்ளூர் மற்றும் உள்நாட்டு தேவைகளை கருத்தில் கொண்டு விஞ்ஞான தொழில் நுட்பவியல் பயில்நெறியில் பல்பரிமாண ஆய்வுகளை ஊக்குவித்தல் இக்கற்கைநெறியின் நோக்கமாகும். விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடநெறியை பூர்த்திசெய்யும் மாணவர் களுக்கு BTech/BSc பட்டம் வழங்கப்படும்.

☞ கணணி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (Computer Science and Technology): சுயகற்கை மற்றும் ஆய்வுமூலம் பெறும் அறிவுகொண்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு துணைநிற்கக்கூடிய உள்நாட்டு வேலைத்தளங்கள், கணினித் தொழில்நுட்பவியல் வளம்பெறக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவது இக்கற்கை நெறியின் நோக்கமாகும். இக்கற்கைநெறியினைப்பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு BSc பட்டம் வழங்கப்படும்.

☞ தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் (Management Science): அசல் உள்ளூர் வளங்களின் நிலையான அபிவிருத்திக்கெனச்செயல்திறனுடன் பங்காற்றக்கூடிய தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் அறிவுடைய பட்டதாரிகளை உருவாக்கல், இக்கற்கை நெறியின் நோக்கமாகும். இக்கற்கைநெறியினைப்பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு BBA/BBM பட்டம் வழங்கப்படும்.

☞ ஏற்றுமதி விவசாயம் (Export Agriculture): ஏற்றுமதியைப்பிரதான நோக்காகக் கொண்டு இயற்கை வளங்களுக்கும் உள்ளூர் விவசாயத்திற்கும் பெறுமதி சேர்க்கக்கூடிய வகையில் விஞ்ஞான முறையியல் கொண்டு விவசாய உற்பத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடிய பட்டதாரிகளை உருவாக்குவது இக்கற்கைநெறியின் நோக்கமாகும். இக்கற்கைநெறியினைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு BSc பட்டம் வழங்கப்படும்.

☞ விலங்கியல் விஞ்ஞானம் (Animal Science): பெரும் வர்த்தக நிலையிலும் குடிசைக்கைத்தொழில் நிலையிலும் இருக்கும் விலங்கு வேளாண்மை உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கக்கூடிய வகையிலும் விலங்கு வேளாண்மை துறையில் விசேட செயல்திறன் கொண்ட பட்டதாரிகளை உருவாக்குவது இக்கற்கைநெறியின் நோக்கமாகும். இக்கற்கைநெறியினைப்பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு BSc பட்டம் வழங்கப்படும்.

### கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்
### (University of Visual Performing Arts)

26-08-2006 அன்று இப்பல்கலைக்கழகமும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. களனிப்பல்கலைக் கழகத்தில் தனிப்பிரிவாக இயங்கும் அழகியல் கலைப்பிரிவு தனிப்பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது. இப்பல்கலைக் கழகத்தில் மூன்று வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வளாகங்கள் தொலைக்காட்சிக்கலை, இசை, நாடகம், கலை ஆகிய பிரிவுகளை கொண்டுள்ளன.

### சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்
### (Sir John Kotelawela Defense University)

நாட்டுக்கு தேவையான பாதுகாப்பு ஆளணியினரை இலங்கையிலேயே உருவாக்கிக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. முப்படையினரும் பொலிசாரும் இங்கு பயின்று பட்டங்களைப்பெற்றுக்கொள்ள முடியும். இதனை ஆரம்பித்த வைத்தவர் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆவார்.

### தேசிய பல்கலைக்கழகங்களில் பதிய பீடங்களின் உருவாக்கம்

1. ராஜரட்ட பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பம்.
2. கிழக்கு பல்கலைக்கழகத்தில் "சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம்" உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக இயங்கும் வவுனியாவளாகத்தை, வன்னிக்கான தனியான பல்கலைக்கழகமாக மாற்றவும் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. மலையகத்திற்கென தனியான பல்கலைக்கழகம் அமைப்பதற்கான ஆரம்ப முன்னெடுப்புக்களை கல்விமான்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டதாலும், ஏனைய பல்கலைக்கழகங்களில் புதிய வளாகங்கள் மற்றும் புதியகற்கை நெறிகள் தொடங்கப்பட்டதாலும் மேலும்பல மாணவர்கள் பல்கலைக்கழககல்வி பெறும்வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.



| க.பொ.த உயர்தரம் தோற்றிய வருடம் | கல்வியாண்டு | பல்கலைக்கழக கல்விக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 2004 | 2004/2005 | 14,850 |
| 2005 | 2005/2006 | 17,287 |
| 2006 | 2006/2007 | 17,600 |
| 2007 | 2007/2008 | 19,650 |

### தேசிய பல்கலைக்கழகங்களில்
### பல சர்வதேச தரத்திலான கற்கைநெறிகளின் உருவாக்கம்

2005/2006 கல்வியாண்டு தொடக்கம், தேசிய பல்கலைக்கழகங்களில் பல புதிய சர்வதேச தரத்திலான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணையானது பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கற்கைநெறிகளை காட்டுகின்றது.

| பல்கலைக்கழகம் | ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கற்கைநெறிகள் |
|---|---|
| கொழும்பு பல்கலைக்கழகம் | 1) உயிரியல் விஞ்ஞானம் |
| | 2) அணு உயிரியல் |
| | 3) கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணக்கு முறை நிதியியலும் |
| பேராதனைப்பல்கலைக்கழகம் | 1) புள்ளிவிபரவியலும் செய்முறை ஆராய்ச்சியும் |
| | 2) கணகீடும் முகாமைத்துவமும் |
| | 3) தாதியியல் |
| | 4) மருந்தாக்கவியல் |
| | 5) மருத்துவ ஆய்வகூட விஞ்ஞானங்கள் |
| | 6) ஊடுகதிர்ப்படமெடுப்பு |
| | 7) இயன் மருத்துவம் |
| மொறட்டுவப்பல்கலைக்கழகம் | 1) திறன் முகாமைத்துவம் |
| | 2) போக்குவரத்தும் தேவைகள் விநியாகங்கள் ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும். |
| யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் | 1) கணிணி விஞ்ஞானம் |
| | 2) தாதியியல் |
| | 3) மருந்தாக்கவியல் |
| | 4) மருத்துவ ஆய்வகூட விஞ்ஞானங்கள் |

ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப்
பல்கலைக்கழகம் 1) தாதியியல்
2) மருந்தாக்கவியல்
3) மருத்துவ ஆய்வகூட விஞ்ஞானங்கள்

களனிப்பல்கலைக்கழகம் சூழல்பாதுகாப்பு முகாமைத்துவம்

ருகுணுப்பல்கலைக்கழகம் கடல்சார் உயிரியல் மற்றும் மீன்பிடித்தல்

தென்கிழக்குப்பல்கலைக்கழகம் இஸ்லாமியர் கல்வியும் அரபுமொழியும்

கிழக்குப்பல்கலைக்கழகம் 1) தாதியியல்
2) மருந்தாக்கவியல்
3) மருத்துவ ஆய்வகூட விஞ்ஞானங்கள
4) ஊடுகதிர்ப்படமெடுப்பு
5) இயன் மருத்துவம்

**2007/2008 கல்வியாண்டில் பின்வரும் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.**

ஊவா பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம், சப்பிரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் களனிப்பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இப்புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கைநெறிகளுக்கு 35 முதல் 80 வரையிலான மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கற்கைநெறிகளின் விபரம் வருமாறு.

1) தேயிலைத்தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் (Tea technology and & value addition)
2) கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் (Industrial information technology)
3) கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் (Mineral resources & technology)
4) செயற்பாடுகளும் தொழில்நுட்ப முகாமைத்துவமும் (Operations & Technology management)
5) வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) (Business information systems(Special)
6) முகாமைத்துவக்கற்கைகளுக்கான தகவல் தொழில்நுட்பம் (Information technology for management studies)
7) கணக்கிடலும் தகவல் முறைமைகளும் (Computing & Information systems)
8) உடற்றொழில் கல்வி (Physical Education)
9) விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் (Sports sciences & Management)
10) பேச்சும் மொழிச்சிகிச்சையும் (Speech and Languages therapy)



**இலங்கையின் பல்கலைக்கழகக்கல்வியில் புதிய சீர்திருத்தங்களின் உருவாக்கம்**

நாட்டின் சகல பல்கலைக்கழகங்களுக்கும் 2005ம் வருடம் தொடக்கம் மாணவர்கள் ஒரே காலப்பகுதியில் அனுமதிக்கப்படுவதுடன், ஒரேநேரத்தில் சகல பல்கலைக் கழகங்களினதும் கல்விநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. சகல பல்கலைக் கழகங்களுக்கும் பொதுவான புதிய கல்விசார் அட்டவணையொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது. இல்கையின் உயர்கல்வித்துறையில் அண்மையில் மேலும்பல புதிய சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

1. பல்கலைக்கழக கற்கைநெறிகளின் கலைத்திட்டமும் பரீட்சை முறைகளும் மறு சீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

2. பல்கலைக்கழக மாணவர்களுக்கு பின்வரும் புதிய துணைக்கற்கைநெறிகள் (Auxiliary Courses) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
   - ☞ ஆங்கில மொழி (English Language)
   - ☞ இலங்கைக்கற்கைநெறிகள், சமூகக்கல்வி, சமூக ஒற்றுமை, பொதுவிவேகம் மற்றும் நடத்தையியல் (Srilankan studies, Social studies, Social Harmony, General knowledge and Behaviorism)
   - ☞ கணிணி அறிவு (Computer Literacy)
   - ☞ தொழில் வழிகாட்டல் (Career Guidance)
   - ☞ முகாமைத்துவமும் தொழில் முயற்சித்திறன்களும் (Management and Entrepreneurial skills)
   - ☞ தொடர்பாடல் திறன்கள் (Communication skills)
   - ☞ பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கான உயிரியல் (Biology for Physical science students)
   - ☞ உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கான கணிதம் (Mathematics for Biological science students)
   - ☞ கலை, வர்த்தகம், மற்றும் முகாமைத்துவ மாணவர்களிற்கான அடிப்படை விஞ்ஞானம் (Basic science for non-science students)

3. பல்கலைக்கழகங்கள் கூட்டாக இணைந்துசெயற்படல் ( Corporative planning for Universities) - இதன்மூலம் பல்கலைக்கழகங்கள் பின்வரும் இலக்குகளை அடைய முடியும்.
   a) வளங்களைப் பகிர்ந்து கொள்ளல்
   b) கல்விச்செயற்பாடுகளை அபிவிருத்திசெய்தல்
   c) விரிவுரையாளர்களை பகிர்ந்துகொள்ளல் - இதற்கமைய நோர்வேயின் சில பல்கலைக் கழகங்களின் அனுசரணையுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், மற்றும் பேராதனைப்பல்கலைக்கழகம் ஆகியன கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன.

4. 2006 ஆம் ஆண்டுதொடக்கம் பல்கலைக்கழகங்களுக்கு திறமை அடிப்படையில் நிதி வழங்கல். (Performance-based funding for 2006).
5. தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் தரத்தை உறுதிப்படுத்தல். (Formalizing quality assurance and accreditation of private sector higher education institutes.)
6. தகவல் தொழில்நுட்பம் போன்ற வளர்ந்துவரும் துறைகளில் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தல்.

### பல்கலைக்கழககல்வியில் பண்புரீதியான மேம்பாட்டைக்காணல்

பல்கலைக்கழக கல்வியில் பண்புரீதியான மேம்பாட்டைக் காணவேண்டிய அத்தியாவசிய நிலை இன்று தோன்றியுள்ளது. கால ஓட்டத்தில் பல்வேறு காரணங்களால் இலங்கைப்பல்கலைக்கழகங்கள் வழங்கும் உயர்கல்வியில் பண்புரீதியான வீழ்ச்சிகளை இனங்காணக்கூடியதாக இருந்தது. ஆசிரியர் கல்வி கற்பித்தல் தராதரங்களையும் துரிதகதியில் முன்னேற்றவேண்டும். குறைந்தபட்சம் தென்னாசிய, தென்கிழக்காசிய பல்கலைக்கழக கல்வித்தரா தரங்களுக்குச் சமனான தராதரங்களை எட்டுவதற்கு கடும் முயற்சிகளை இன்று மேற்கொள்ள வேண்டியுள்ளது. உலகமயமாக்கம் மற்றும் புதியதொரு பொருளாதார, சமூக, கலாசார சூழலுடன் ஒத்தியங்கும் தன்மைவாய்ந்த பட்டதாரிகள், உயர்கல்வி கற்ற இளைஞர்கள் ஆகியோரின் தேவையை நிறைவுசெய்ய இத்தர மேம்பாடு உதவும்.

### தெற்காசிய பல்கலைக்கழகத்தின் தோற்றுவாய்க்கான முன்முயற்சிகளும், இலங்கை மாணவர்களுக்கான கல்விவாய்ப்பும்.

சார்க் நாடுகளின் மாணவர்களின் உயர்கல்வின் ஒரு மைல்கல்லாக தெற்காசிய பல்கலைக்கழகம் இந்தியாவில் அமையவுள்ளது. இதற்கான நிதிவளத்தை இந்தியா வழங்குகின்றது.

### இலங்கை மாணவர்களது சர்வதேசப்பல்கலைக்கழகங்களை நோக்கியதான ஆர்வம்

தற்போதைய சூழலில் இலங்கை மாணவர்களது சர்வதேசப் பல்கலைக் கழகங்களை நோக்கியதான ஆர்வம் அதிகரித்துச்செல்கின்றது. இதற்கான காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) க.பொ.த (சா/த) தகைமைகளின்றி இலங்கையில் மேற்படிப்புக்கான வாய்ப்புகள் குறைவு/சாத்தியமற்றுப்போதல்.
2) க.பொ.த (உ/த) தகைமைகளைக்கொண்டுள்ள மாணவர்களில் கணிசமான பகுதியினர் (ஏறத்தாள 85 வீதமானோர்) உள்வாரியாக பல்கலைக்கழக அனுமதியைப் பெறத்தவறுதல்)



3) இன்றைய தொழிற்றுறையில் சர்வதேசதரத்திலான தகமைகளுக்கான அவசியம்/தேவைப்பாடு.
4) இலங்கையை நோக்கியதான சர்வதேசப்பல்கலைக்கழகங்களின் அதிகரித்த வருகையும் மேம்பாட்டு நடவடிக்கைகளும்.
5) தகவல் தொழில்நுட்பதுறையின் அபரிதமான வளர்ச்சிப்போக்கு.

மேற்போர்ந்த காரணிகளால் ஈர்க்கப்படும் நமது மாணவர்கள் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் கற்க முற்படுகின்றனர்.

### தனியார் பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களின் தோற்ற முனைப்புக்கள்

உள்நாட்டு தனியார் உயர்கல்வி நிறுவனங்களும், சர்வதேசப் பல்கலைக் கழககங்களின் பிரதிநிதி நிறுவனங்களும், இலங்கையில் பட்டப்படிப்பிற்கான அத்திவார கற்கை நெறிகளுக்கும், பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு ஆகியவற்றுக்கும் பாடநெறிகளை நடாத்தி பட்டங்களை வழங்குகின்றனர். இதன்மூலம் தேசிய பல்கலைக்கழகங்களின் அனுமதி கிடைக்காத மாணவர்கள் பட்டங்களைப்பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துச்செல்கின்றன. இப்படியான நிறுவனங்களின் கல்வித்தரத்தை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. இதனை உணர்ந்த அரசாங்கம் தரமான பட்டப்படிப்புகளை வழங்கும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களை இனங்கண்டு, மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதுடன் அவற்றினைக்கண்காணித்து வருகின்றது.

### கல்வியைத்தனியார்மயமாக்கலும் பல்கலைக்கழக மாணவர்களது ஆர்ப்பாட்டங்களும்

அண்மைக்காலமாக அடிக்கடி பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கல்வியைத்தனியார்மயமாக்கும் முயற்சிக்கு எதிராக ஆர்ப் பாட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக பின்வரும் குற்றச்சாட்டுக் களை முன்வைக்கின்றார்கள்.

1. இலங்கையில் இலவசக்கல்வியை ஒழிப்பதற்கு உலகவங்கியிடமிருந்து 60 மில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது.
2. அரசாங்கம் நாட்டில் இலவசக்கல்வியை இல்லாதொழிக்கும் செயல்களில் ஈடுபடுகின்றது.
3. சில அரச உயரதிகாரிகள் தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றனர்.

கல்வியின் உலகமயமாக்கல் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாணவர்கள் அரசியல் பின்னணியை கொண்டிருக்கின்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மாணவர் அமைப்புக்கள், தனியார்மயம் என்று எதைக்கூறுகின்றனரோ தெரியாது. தனியார் பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு இப்போது அரசாங்க பாடசாலைகளாக இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளையோ, அரசாங்க நிறுவனங்களாக இயங்கிவரும் உயர்கல்வி நிறுவனங்களையோ தனியாருக்கு

8418 cc

கையளிப்பதையே தனியார்மயமாக்கல் எனக்கூறலாம். புதிதாக பட்டப் படிப்புக்கான உயர்கல்வி நிலையங்களை, தனியார் நிறுவனங்கள் அமைப்பதை தனியார்மயமாக்கல் எனக்கூறமுடியாது. எனவே பல முன்னணிப்பாடசாலைகளும் தனியார் நிறுவனங்களாக இயங்கி வருகின்றன. அரசாங்க துறையுடன் தனியார்துறையும் கல்விப்பணியில் ஈடுபடுகின்றது என்னதே இதன் அர்த்தம்.

பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான கல்வித்தகைமையை பெற்றவர்களுள் 16000 பேர் வரையிலேயே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றார்கள். வெட்டுப்புள்ளி காரணமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் பல்கலைக்கழக கல்விவாய்ப்பை இழக்கின்றனர். நாட்டின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களால் இதை அனுமதிக்க முடியாது. தனியார் பட்டப்படிப்புநிலையங்கள் இருந்தால் வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு சென்று படிக்க முடியும். இதில் தவறு ஏதும் இல்லை. வசதி படைத்தவர்கள் இப்போது வெளிநாடுகளுக்கு சென்று கற்கிறார்கள். பட்டப்படிப்பிற்கான தனியார் நிலையம் உள்ளூரில் செயற்படுமானால் இவர்கள் வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய தேவை ஏற்படாது. இலங்கையிலேயே பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். செலவும் குறைவு. இது தனியார் மயமாக்கலல்ல. பட்டப்படிப்பிற்கென தகுதி இருந்தும், அப்படித்தொடர முடியாதவர்களுக்கு கல்வி வாய்ப்பளிப்பதற்கான ஏற்பாடுதான் இது.

**முடிவுரை**

உயர்கல்வி என்னும்போது சிறப்பாக அது பல்கலைக்கழக கல்வியையே குறிக்கின்றது. உயர்கல்வி நிதி ஒதுக்கீடுகளில் கணிசமானபங்கை அது எடுத்துக் கொள்கின்றது. பல்கலைக்கழகங்களின் அடிப்படைக்குறிக்கோள்களாக பின்வருவன அமைந்துள்ளன.

- ☞ நாட்டின் கலாசாரங்களை வளர்த்தல்
- ☞ மாணவர்களிடையே அறிவையும் உத்தம பண்புகளையும் வளர்த்தல்
- ☞ சிறந்த தரம்படைத்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடுதல்
- ☞ நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்தல்

மாறிவரும் உலகிற்கேற்ப பல்கலைக்கழகங்கள் காலத்தோடு இணைந்து செயற்பட வேண்டியதேவை இன்று ஏற்பட்டுள்ளது. உலகமயமாக்கலின் விளைவாக, சர்வதேச சந்தையில் தரமான மனிதவளத்தை வழங்க வேண்டியதேவை இலங்கை பல்கலைக் கழகங்களின் முன்னுள்ள பாரிய சவாலாகும். இலங்கையின் உயர்கல்வித்துறையில் அண்மைக்காலமாக பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எமது நாட்டின் அரசதுறைப் பல்கலைக் கழகங்கள் நிதியங்களின் பற்றாக்குறை காரணமாகப்பாதிக்கப்படுவதனால் ஒருபக்கத்தில் நன்மை பயக்கக்கூடிய சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தை



அறிமுகப்படுத்து வதும் மறுபக்கத்தில் தகுதிவாய்ந்த கல்விசார் பணிகளை தொடர்ந்து வைத்திருப்பதும் பாதிக்கப்படுகின்றது.

மாணவர் ஏற்படுத்தும் குழப்பங்களுக்கு ஒரு முடிவு காண்பதன்மூலமும், பல்கலைக் கழகங்களை நீண்டகாலத்திற்குத் திறந்து வைத்திருப்பதன் மூலமும் சர்வதேச மட்டங்களை அடையலாம். இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களால் பின்பற்றப்படும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட கல்வி அட்டவணையை எமது நாட்டிலும் பின்பற்ற முடியாதுள்ளது. நீடித்துநிலைத் திருக்கும் மாற்று மூலங்களைக் கண்டறியாது பல்கலைக்கழகங்களின் நிதியிடலுக்காக அரசதுறையை மட்டும் நம்பியிருத்தல், உலகின் ஏனைய நாடுகளின் பல்கலைக்கழகங்களின் அபிவிருத்தி களுடன் இணைந்துசெல்லும் விதத்திலான பல்கலைக்கழக முறைக்கு முக்கிய தடையாக இருக்கின்றது.

மாறிவரும் உலகிற்கேற்ப, இலங்கையின் உயர்கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், அனைத்துவர்க்க மக்களிற்கும் பயனளிக்க கூடியனவாக இருத்தல் வேண்டும். சரவதேச மட்டத்தில் பல்கலைக்கழக கல்வியை கொண்டு செல்வதற்கு அரசாங்க நிதியில் மட்டும் தங்கியிருக்கும் பழக்கம் கைவிடப்பட வேண்டும். நீடித்து நிலைத்திருக்கும் மாற்று நிதிமூலங்களை கண்டறிந்து உயர்கல்வி அபிவிருத்திக்கு பயன்படுத்து வதன்மூலம், சர்வதேச பல்கலைக்கழகங்களின் தரத்திற்கு இணையாக எமது பல்கலைக் கழகங்களையும் உயர்த்திக்கொள்ள முடியும்.

ஆர்வமும் தகுதியும் உடைய அனைவருக்கும், உயர்கல்விக்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டும். அதற்கேற்ப உயர்கல்வி வாய்ப்புக்களை உள்நாட்டில் அபிவிருத்தி செய்துகொண்டால் மாத்திரமே, எமது நாட்டின் கல்வித் தரத்தினையும் மனித வளத்தையும் உயர்த்திக்கொள்ளலாம். இதனூடாக நாம் எதிர்பாக்கும் எமது நாட்டின் அபிவிருத்தியை அடையமுடியும். ■

**உசாத்துணைகள்**

1. Media unit, Ministry of Education (2005) 08-08-2005 Daily News.
2. தினகரன் (27-08-2005)
3. Daily News ( 06-08-2005)
4. மெற்றோ நியூஸ் (27-06-2005)
5. Enhancing knowledge and virtues, (02 June2006) University grants commission& Ministry of Higher Education, Daily News.

*தினகரன் (04.07.2007)*

*அகவிழி (ஜூன் 2007)*

3

# தேசிய ஆற்றலையும் அபிவிருத்தியையும் அதிகரிக்க அனைவருக்கும் விஞ்ஞானக் கல்வி காலத்தின் தேவை

அனைவருக்கும் கல்வி (Education For All) என்ற கோட்பாட்டில் இருந்து அனைவருக்கும் பின்வரும் விடதானங்களிலான கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற உலகளாவிய கருத்து வலுப்பெற்று வருகின்றது. அவையாவன;

- ☞ அனைவருக்குமான விஞ்ஞானக் கல்வி (Science Education For All)
- ☞ அனைவருக்குமான ஆங்கிலக்கல்வி (English For All)
- ☞ அனைவருக்குமான தகவல் தொடர் பாடல் தொழில்நுட்பக்கல்வி (Information Comunication Technology Education For All)
- ☞ அனைவருக்குமான சுகவாழ்வுக் கல்வி (Health Education For All) இதிலிருந்து உபபிரிவாக அனைவருக்குமான எயிட்ஸ் கல்வி (AIDS Education For All) என்ற கட்டளைப் படிமமும் உருவாகியுள்ளது.
- ☞ அனைவருக்குமான சட்டக்கல்வி (Law Education For All)
- ☞ அனைவருக்குமான மனித உரிமைக் கல்வி (Human rights Education For All)

அனைவருக்கும்விஞ்ஞானக்கல்வி வழங்க வேண்டியது காலத்தின் தேவை யாகவுள்ளது. தற்காலத்தில் அனைத்துச் செயற்பாடுகளும் விஞ்ஞான பூர்வமாக அமைய வேண்டும என எதிர்பார்க்கப்படுகின்றது. மனிதனின் சிந்தனை (Thinking), அனுகுமுறை (Approach), ஆராய்ச்சி (Research) போன்ற செயற்பாடுகள்யாவும் விஞ்ஞான கண்ணோட்டத்துடன் பார்க்கப் படுகின்றது.



(5) விஞ்ஞான பாட கற்றல் - கற்பித்தல் செயன்முறை, செயன் முறைப் பாங்கிலிருந்து விலகி, பாடநூலை அடிப்படையாகக் கொண்ட தனியே அறிவைக் கடத்தும் செயன்முறையாக உருவெடுத்துள்ளமை.

(6) பரீட்சையை இலக்காகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் பால் முனைப்புற்று அதன் விளைவாகத் தேடிப் பார்த்துக் கற்றலில் இருந்து விலகி பொறி முறையான கற்றலின் பால் மாணவர்கள் முனைப்புப் பெற்றமை.

தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய விஞ்ஞானக் கல்வி மறுசீரமைப்பும் மேற் கூறப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமா என்பதும் கேள்விக்குறியாகும். பாடசாலைகளில் முறையான விஞ்ஞானக் கல்வி பரவலாக்கத்திற்குப் பின்வரும் விடயங்களிலும் கூடிய அக்கறை செலுத்தப் பட வேண்டும்.

- ☞ கிடைக்கக் கூடிய ஆய்வுகூட வசதிகளையும், வளங்களையும் பயன்படுத்தி பரிசோதனைகளுடன் கூடியதாகக் கற்பித்தல் அமைய வேண்டும்.
- ☞ ஆசிரியர்கள் மாறிவரும் விஞ்ஞானம்சார் செயற்பாடுகள், கோட்பாடுகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்.
- ☞ பாடசாலை மட்ட விஞ்ஞானம் சார் செயற்பாடுகளை ஊக்குவித்தல் வேண்டும். அதாவது விஞ்ஞான சங்கங்கள் அமைத்தல், வருடாந்தம் கண்காட்சிகளை நடத்துதல், மூலிகைத் தோட்டங்கள், பாடசாலைத் தோட்டங்கள் அமைத்தல் மற்றும் வெளிக்களச் சுற்றுலாக்களை (Field trips) ஏற்பாடு செய்தல் மற்றும் விஞ்ஞானம் சார் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கல்.
- ☞ தேசிய விஞ்ஞான சங்கம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் மாணவர்களுக்கான விஞ்ஞானப் போட்டிகளில் ஆர்வமுடன் கலந்து கொள்ள வேண்டும். இளம் விஞ்ஞானிகளை இனங்காண்பதற்கான புத்தாக்குனர் போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும். விஞ்ஞான கண்காட்சிப் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும்.
- ☞ சர்வதேச மற்றும் ஆசிய கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளிலும் பௌதீக வியல் ஒலிம்பியாட் போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வேண்டும்.

## பல்கலைக்கழ மட்டத்தில்
## விஞ்ஞானக் கல்வியின் மாற்றங்கள் மற்றும் செயற்பாடுகள்

பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானப் பட்டப்படிப்புக்குரிய கற்கை நெறிகள் தற்கால தேவைக்கேற்ப மறுசீரமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல சர்வதேச தரத்திற்கு இணையான புதிய கற்கை நெறிகள் அறிமுகஞ் செய்யப்பட்டுமுள்ளன.

பல்கலைக்கழக புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக உயிரியல் விஞ்ஞான மாணவர்களுக்கு கணிதமும் (Mathematics for Biological Science Students) பௌதீக விஞ்ஞான மாணவர்களிற்கு உயிரியலும் (Biology for Physical Science Students) போதிக்கப்படுகின்றது. இதன் மூலம் விஞ்ஞானத்தின் அனைத்துப் பிரிவு பற்றியும் அனைவரும் தெரிந்துகொள்ள வழியேற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக்கழகத்தில் கலை, வணிக மற்றும் முகாமைத்துவ கற்கை நெறிகளை பயிலும் விஞ்ஞானம் சாராத மாணவர்களுக்கு (Non Science Students) அடிப்படை விஞ்ஞானம் போதிக்கப்படுகின்றது.. இதன் மூலம் வாழ்க்கையில் இவர்கள் நடைமுறைசார் அடிப்படை விஞ்ஞான அறிவைப் பெற்றுக் கொள்வதுடன் தமது பிரதான பாடங்களிலுள்ள விஞ்ஞானம் சார் எண்ணக்கருக்களை எதுவித பிரச்சினையுமின்றி விளங்கிக் கொள்ளமுடியும்.

பல்கலைக்கழகங்களிலுள்ள மருத்துவ பீடம், விவசாயபீடம் மற்றும் விஞ்ஞான பீடங்கள் விஞ்ஞானம்சார் கண்காட்சிகளை நடத்துவதனூடாக பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களுக்கு விஞ்ஞான அறிவை வழங்குதலில் காத்திரமான பங்களிப்பை வழங்குகின்றன.

## விதாதா வளநிலையங்களின்
## (Vidatha Resource Centers) பங்களிப்பு

விஞ்ஞான தொழில்நுட்ப அறிவை கிராமங்களுக்குக் கொண்டு செல்லும் நோக்குடன், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் ஸ்தாபிக்கப்பட்டுவரும் நிறுவனங்களாகும். பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினூடாக இந்நிலையங்களின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின்கீழ் இவை உருவாக்கப்பட்டுள்ளன. இவை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.



விஞ்ஞானமானது "அறிவுத்தொகுதியின் திரட்டு" என்றும் "இயற்கை உலகுபற்றிய கற்கை என்றும் பல்வாறு வரைவிலக்கணப்படுத்தப் படுகின்றது. இது தேர்வுகள், கொள்கைகள், ஆராய்ச்சிகள், கண்டு பிடிப்புக்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்டதாகும். தற்காலத்தில் விஞ்ஞானமானது பல கிளைகளை (Branches) கொண்டிருப்பதுடன், அனைத்துத்துறைகளையும் உள்வாங்கியும் உள்ளது.

விஞ்ஞானமானது மக்களை வறுமையில் இருந்து விடுவிக்கின்றது; அவர்களின் ஆயுளை அதிகரிக்கச் செய்கின்றது; வேலைச்சுமைகளைக் குறைக்கின்றது; அத்துடன் அவர்களுக்கான சுய ஒய்வையும் வழங்குகின்றது; ஒட்டுமொத்தத்தில் மனிதனைப் புதியவனாக்குகின்றது. மறுபக்கமாக நோக்கின்அழிவுகளின் திறவு கோலாக இருப்பதும் விஞ்ஞானமே என வாதிட்டாலும், மாற்றமடைந்துவரும் உலகுடன் ஒருவர் ஒட்டிப்போக வேண்டுமாக இருந்தால் அவர் அடிப்படையான விஞ்ஞான அறிவையாவது பெற்றிருக்க வேண்டும்.

பெரும்பாலான வளர்முக நாடுகள் விஞ்ஞானக் கொள்கையொன்றை உருவாக்குவதிலும் அவற்றின் கல்வி அமைப்புக்களைச் சீரமைத்துப் பரவலாக்குவதன் மூலமும் விஞ்ஞான ஆட்சக்தியை உற்பத்தி செய்வதில் ஈடுபாடு கொண்டுள்ளன.

இலங்கையிலும் தேசிய விஞ்ஞானக் கொள்கையொன்று அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கொள்கைக்கு அமைவாக அனைவருக்கும் விஞ்ஞானக் கல்வி வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதில் பல்வேறு நிறுவனங்களும், அமைப்புக்களும் ஈடுபடுகின்றன. இலங்கையில் விஞ்ஞானக்கல்வியை தற்காலத்தில் வழங்கும் நிறுவனங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ☞ பாடசாலைகள்
- ☞ பல்கலைக்கழகங்கள்
- ☞ விதாதா வளநிலையங்கள்
- ☞ நெனசல அறிவகங்கள்
- ☞ விஞ்ஞானச் சங்கங்கள்

## பாடசாலை விஞ்ஞானக்கல்வியின் அண்மைக் கால மாற்றங்கள்

விஞ்ஞானக்கல்வியை பரவலடையச் செய்யும்பிரதான அடிப்படைத் தளங்களாக விளங்குபவை பாடசாலைகள் ஆகும். காலத்துக்குக் காலம்

பாடசாலை கலைத்திட்ட மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும்போதெல்லாம் விஞ்ஞான பாடத்திலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டு வந்துள்ளதனை அவதானிக்க முடியும்.அவற்றில் குறிப்பிடத்தக்க மாற்றங்களாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிட முடியும்.

☞ முன்னர் கனிஷ்ட இடைநிலை மட்டத்தில் தனித்தனியாகக் கற்பிக்கப்பட்ட தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் ஆகிய பாடங்கள், 1972 ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பில் ஒன்றிணைக்கப் பட்டு "ஒன்றிணைக்கப்பட்ட விஞ்ஞானம்" (Integrated Science) அறிமுகம் செய்யப்பட்டது.

☞ 2000 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தர பாடத்தில் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்கள் இணைக்கப்பட்டு உயிரியல் (Biology) பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. அதே போல் பிரயோக கணிதம் மற்றும் தூயகணிதம் ஆகிய பாடங்கள் ஒன்றிணைக்கப்பட்டு இணைந்த கணிதம் (Combined Maths) அறிமுகம் செய்யப்பட்டது.

## 2007 ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பில்;

(i) தரம் 10 -11 இல் இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல் ஆகிய பிரதானமான விஞ்ஞான பாடங்கள் மூன்றும் சமஅளவில் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட மூன்று மொடியூல்களை க. பொ.த சாதாரணதரம் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

(ii) தரம் - 6 இல் சுற்றாடல்கல்வி பாடத்திற்குப் பதிலாக விஞ்ஞான பாடம் அறி முகம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்டு வந்த விஞ்ஞான பாடகலைத்திட்ட அமுலாக்கத்தில் காணப்பட்ட குறை பாடுகள் பற்றி நவீன கல்விச் சீர்திருத்தத்தில் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(1) சர்வதேசரீதியான விஞ்ஞான எண்ணக் கருக்களும் திறன்களும் மாணவர் களிடம் விருத்தியடைய போதிய வாய்ப்பு கிடைக்கவில்லை.

(2) அடிப்படையான சில எண்ணக்கருக்கள் அடங்கியிருக்காமையினால் விஞ்ஞான எண்ணக்கருக்களை அடைவதில் தடங்கல் ஏற்பட்டமை.

(3) விஞ்ஞான எண்ணக்கருக்களை அடையத்தக்க வகையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு அமையாமை.

(4) ஆரம்பதரங்களில்சுற்றாடல் சார் செயற்பாடுகள் பாடத்தின் ஊடாக அடிப்படையான விஞ்ஞான எண்ணக்கருக்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு அடையப் பெறாமை.



200227

## நெனசல அறிவகங்களின் பங்களிப்பு

"உலக அறிவு கிராமத்திற்கு" என்னும் தொனிப்பொருளில், மஹிந்தசிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதிலும் உருவாக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பகூடங்கள் நெனசல அறிவகங்களாகும். 2008 ஆம்ஆண்டிற்குள் ஆயிரம் நெனசல, அறிவகங்கள் நாடு முழுவதிலும் உருவாக்கும் நோக்கம் கொண்ட இச்செயற்றிட்டம் ஜனாதிபதியின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் ஜனாதிபதி செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. நெனசல அறிவகங்களின் செயற்பாடுகளாக பின்வருவன அமைந்துள்ளன.

i. பொதுமக்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தல்.

ii. இளைஞர், யுவதிகளுக்குத் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சியளித்து, வேலைவாய்ப்புக்கு வழிகாட்டல்.

iii. வேலைவங்கி (Job Bank) தொடர்பான தகவல்களை வழங்குதல்.

iv. வலது குறைந்தோருக்கான பயிற்சி வழங்குதல் மற்றும் அவர்கள் இணையத்தில் பிரவேசித்து கற்பதற்கான வசதியளித்தல்.

v. தகவல் தொழில்நுட்பத்துறையில் காணப்படும் மகத்தான வாய்ப்புக்களை கிராமப்புற பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தெரியப்படுத்தி அவர்களை இத்துறையில் கவர்ந்திழுத்தல்.

vi. விவசாயிகள் பயிர்ச் செய்கையில் அன்றாடம் எதிர்நோக்கும் நோய்த்தாக்கம், தடுப்பு முறைகள் தொடர்பான பிந்திய தகவல்களை வழங்குதல் போன்ற உயரிய நோக்கங்களை இந்நெனசல அறிவகங்கள் கொண்டுள்ளன. துரதிஷ்டவசமாக யாழ். மாவட்டத்தில் இவற்றின் செயற்பாடுகள் இன்னும் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக இல்லை.

## விஞ்ஞான அறிவைப் பரப்புதலில் ஈடுபட்டுள்ள தேசரீதியான அமைப்புக்கள்

(1) இலங்கை தேசிய விஞ்ஞான மையம் (National Science Foundation - NSF)
(2) SLAS
(3) யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் (Jaffna Science Association - JSA)
(4) தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் (Field Work Centre)

இவற்றின் பணிகளாக பின்வருவன அமைகின்றன.

☞ விஞ்ஞான ஆராய்ச்சிகளை ஊக்கு வித்தல்

☞ பயிற்சிகள் கருத்தரங்குகள் நடத்தல்

☞ விஞ்ஞானிகள்/ ஆராய்ச்சியாளர்களுக்கு நிதியுதவி அளித்தல்

☞ பாடசாலை மாணவர், ஆசிரியரிடத்து விஞ்ஞான அறிவை வளர்க்கும் செயற்றிட் டங்களில் ஈடுபடல்.

- விஞ்ஞான கண்காட்சிகள், விஞ்ஞானச் சந்தைகள் (Science Fair) நடாத்தல்
- பாடசாலை மாணவர்கள், ஆசிரியரிடத்து போட்டிகள் நடாத்தல்.

## அனைவருக்குமான விஞ்ஞானக்கல்வி வழங்குதலில் எதிர்கொள்ளும் சவால்கள்

- தேசியரீதியில் சம அளவில் திட்டங்கள் செயற்படுத்தப் படவதில்லை. இதற்கு தற்கால போர்ச்சூழலும் ஒரு காரணம்.
- யாழ் பாடசாலைகளின் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் எவற்றிலும் இரசாயனப் பொருள்கள் இல்லை. 2004 ஆம் ஆண்டுக்குப்பின்னர் அவை கிடைக்கப் பெறவில்லை. இதனால் மாணவர்களின் ஆய்வுகூடச் செயற்பாடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.
- போதிய நிதிவளமின்மை.
- பல்கலைக்கழகங்கள் - பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் சமூகம் என்பவற்றிற் கிடையிலான உறவுகள் நெருக்கமின்மை.
- மேலைநாடுகளில் உள்ளது போன்ற Planetarium இலங்கையில் இல்லாதிருத்தல். இவற்றினை இலங்கையிலுள்ள பல்கலைக்கழக விஞ்ஞான பீடங்களில் அமைக்கலாம்.

**முடிவுரை:**

அதிகரித்துவரும் போட்டிமிக்க உலகப் பொருளாதாரத்தில் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பமானது, தேசிய அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் மிகமுக்கியமான ஒரு அம்சமாக மாறி வருகின்றது. விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்துறையின் வேகமான முன்னேற்றம், அத்துடன் அவை எல்லா விடயங்களிலும் இரண்டறக்கலந்து நிற்கின்ற தன்மை, மேலும் அவற்றினால் செல்வம் சேர்க்கக்கூடிய சந்தர்ப்பம் இருத்தல் ஆகியன காரணமாக நாடுகள் தமது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆற்றல்களைக் கூட்ட வேண்டிய அவசியத்தில் இருக்கின்றன.

மேற்கூறிய காரணங்களால், விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அறிவினை சிறப்பாகப் பயன்படுத்தி அவற்றினை வளர்த்தெடுத்து தேசிய ஆற்றலை அதிகரிப்பதற்கான முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் ■

*உதயன்*
*06.07.2008*



# 4

# இலங்கையின் ஆசிரியர் கல்வியில் எதிர்நோக்கப்படும் சவால்கள்

ஏனைய தொழிற்துறைகளில் இருந்து மாறுபட்டது ஆசிரியத்தொழில். பலர் தமது சுய விருப்பத்துடனும் இன்னும் சிலர் விருப்பமின்றியும் இவ் ஆசிரியர் சேவையினுள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இலங்கையைப்பொறுத்தவரை அரச தொழில்களில் ஆசிரியத்தொழில் புரிவோரே அதிகம் எனலாம். மற்றைய அரச தொழில்களுடன் ஒப்பிடுகையில் அதிக ஊதியம் கிடைக்கின்றது. இவர்களுக்கென வலிமையான தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. சமுதாயத்தில் வல்லமை படைத்தவர்களாகவும் விளங்குகின்றார்கள்.

இப்படிப்பட்ட நன்மைகள் பல ஆசிரியத்தொழில் கொண்டிருந்தாலும் அது இன்று பல சவால்களை எதிர்நோக்குகின்றது. அதில் ஒன்றுதான் ஆசிரியர்களுக்கான பயிற்சியில் எதிர்நோக்கப்படும் இடர்பாடு ஆகும். 2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டதாரி நியமனங்களில், மிக அதிகளவானோருக்கு கல்வி அமைச்சினூடாக ஆசிரிய நியமனங்களே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு நியமனம் பெற்றவர்களில் பலர் முழுமையாக ஆசிரியத்தொழிலுடன் ஒன்றித்து போகமுடியாதவர்களாக இன்றும் இருக்கின்றார்கள்.

பட்டதாரிஆசிரியர்கள் மட்டுமன்றி ஏனைய வகை ஆசிரியர்களிடமும் இக்குறைபாடு காணப்படுகின்றது. இதற்கான காரணம் இவர்களுக்கு முறையான ஆசிரியர் பயிற்சி வழங்கப்படாமையாகும். இதற்கான தீர்வுகளை

கண்டறிவதனூடாக எமது ஆசிரியர்களின் வாண்மை விருத்தியை அதிகரிப்பதுடன் அவர்களின் தொழிற்பற்றையும் வளர்த்தெடுக்க முடியும். ஆசிரியர்களுக்கான பயிற்சி வாய்ப்புக்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

"ஆசிரியப்பயிற்சி பெறாத எவரும் வகுப்பறைக்கு சென்று மாணவர்களுக்கு கற்பிக்க தகுதியற்றவர்கள்"என்பது நவீன கல்வியியலாளர்களின் கருத்தாகும். ஆனால் இலங்கையைப்பொறுத்தவரை பெரும்பாலான ஆசிரியர்கள் எதுவித ஆசிரியப்பயிற்சியும் பெறாது பல வருடங்கள் வகுப்பறைக்கற்பித்தலில் ஈடுபட்ட பின்னரே ஆசிரியப்பயிற்சியை பெற்றுக்கொள்கின்றனர்.

இன்னும் சிலர் எதுவித ஆசிரியப்பயிற்சியையும் பெற்றுக் கொள்ளாமலே தமது ஆசிரிய சேவைக்காலத்தை நிறைவுசெய்தும் வருகின்றனர். எதுவித ஆசிரியப்பயிற்சியையும் பெற்றுக்கொள்ளாத மீத்திறன் மிக்க ஆசிரியர்கள் பலரும் எமது சமுதாயத்தில் உள்ளனர். தனியார் கல்விநிலைய ஆசிரியர்கள் பலரும் இந்த வகைக்குள் உள்ளடக்கப்படலாம். ஆனால் இத்தகையவர்களால் பரீட்சை நோக்கில் மட்டும் மாணவர்களுக்கு உதவ முடியுமேயொழிய மாணவனின் முழுமையான வளர்ச்சியில் பங்களிக்க முடியாது. மறுபக்கம் பல்வேறு ஆசிரியப்பயிற்சிகளையும் பெற்றுக்கொண்ட ஆசிரியர்கள் பலர் தமது கற்பித்தல் நடவடிக்கையில் முழுமையாக ஈடுபடாது ஏமாற்றும் போக்கில் செயற்பட்டு வருவது எமது ஆசிரியர்களின் பொறுப்பற்ற தன்மையையே எடுத்துக்காட்டுகிறது.

எமது நாட்டில் பிரதானமாக இரண்டுவகையான ஆசிரியப்பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு வழுங்கப்படுகின்றன

1. ஆசிரியசேவை முன்பயிற்சி (Pre Service Training)
2. ஆசிரிய சேவைக்காலப்பயிற்சி (In Service Training)

### ஆசிரியசேவை முன்பயிற்சி (Pre Service Training)

உலகளாவியரீதியில் தற்காலத்தில் ஆசிரியசேவை முன்பயிற்சிக்கு அதிகளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இத்தகைய பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் (Colleges of Education) என்பனவிளங்குகின்றன.

### கல்விமாணி கற்கைநெறி (B.Ed/ B.Sc with Education)

பட்டதாரிகளைப்பொறுத்தவரை அவர்கள் கல்விமாணிக் கற்கைநெறிக் கூடாக ஒரு முழுமையான ஆசிரியராக செதுக்கப்படுகின்றனர். இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கைத்திறந்த பல்பலைக்கழகம் என்பன கல்விமாணி கற்கை நெறியை (B.Ed) நடாத்துகின்றன. யாழ்.பல்கலைக்கழக



விஞ்ஞானபீடம் இக்கற்கை நெறியை B.Sc with Education என்ற பெயரில் நடாத்துகின்றது. தேசிய கல்வி நிறுவனத்தி னாலும் (N.I.E) இக்கற்கைநெறி பல்வேறுபிராந்தியநிலையங்களினூடாகநடத்தப்படுகின்றது.

கல்விமாணி கற்கைநெறியைப்பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கு ஆசிரிய நிமனம் வழங்குவதில் கல்வியமைச்சு முன்னுரிமை அளிக்கின்றது. யாழ்.பல்கலைக்கழகத்தில் முதல் அணியில் B.Sc with Education பட்டம் பெற்ற பட்டதாரிகள் நாட்டின் பல்வேறு தேசிய பாடசாலைகளிலும், பிரபல்யம் மிக்க பாடசாலைகளிலும் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளனர்.

2005 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பில் அதிகளவில் ஆசிரியர் நியமனங்களே வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஆசிரியநியமனம் பெற்றோர் எதுவித கற்பித்தல் பயிற்சிகளையும் பெறாது, அல்லது சிலநாள் பயிற்சிபெற்று இன்று பாடசாலைகளில் கற்பித்துக் கொண்டிருக் கின்றனர். இது நீண்டநாள் நோக்கில் மாணவர் களின் அடைவுமட்டத்தை பெருமளவில் பாதிக்கும்.

இந்த ஆபத்தை உணர்ந்து அரசாங்கம் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் அனைத்துப்பாடத்துறைகளுக்குமான (கலைத்துறை, விஞ்ஞானத்துறை,வணிகத்துறை) கல்விமாணி பாடநெறிகளை ஆரம்பிக்க வேண்டும். தற்கால உடனடி நிவாரணமாக பல்கலைக்கழகங்கள் அனைத்து இளமாணிப் பட்டதாரிகளுக்கும் அவர்களின் பாடத் துறைகளுடன் சேர்த்து கல்வியியல் பாடங்களையும் போதிக்க வேண்டும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதிக்காக காத்திருக்காது பல்கலைக்கழகங்கள் குறுகியகால கற்பித்தல் பயிற்சிகளையாவது வழங்க முன்வரவேண்டும்.

### கல்வியியல் கல்லூரிகளின் (Colleges of Education) தோற்றமும் ஆசிரிய பயிற்சியின் புதிய பரிமாணமும்

உலகமயமாக்கலின் விளைவாக உலகத்தரத்திற்கு இணையாக எமது நாட்டிலும் ஆசிரியவளத்தினை உயர்த்திக்கொள்ளவென தோற்றம் பெற்றவைதான் கல்வியியல் கல்லூரிகள். இங்கு மூன்றாண்டு வதிவிடப்பயிற்சி பெற்ற ஆசிரிய மாணவர்கள் பலதிறன்படைத்த ஆசிரியர்களாக உருவாக்கப்படுகின்றார்கள்.

இன்று நாட்டின் பிரபலமான ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி பாடசாலைகள், கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற ஆசிரியர்களை போட்டிபோட்டு

8418 C.C

உள்வாங்குகின்றன. அண்மைக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றத்தில் கல்வியியல் கல்லூரிகளின் வகிபங்கு காத்திரமானது.

## ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் (Teacher Training Colleges)

எமது நாட்டின் மிகவும் பாரம்பரியம் மிக்க ஆசிரியப்பயிற்சி நிறுவனங்களாகும். இவை ஆசிரியத்தொழிலுக்கு உள்வாங்கப்பட்டபின் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பணியைப்புரிகின்றன. கல்வியியல் கல்லூரிகளின் தோற்றத்தின் பின்னர் இவற்றின் முக்கியத்துவம் குறையத்தொடங்கியுள்ளது. குறிப்பிட்டகாலத்தின்பின்னர் இவற்றை மூடிவிடவும் அரசாங்கம் தீர்மானித்தது.

ஆனாலும் இவற்றின் பணியை முற்றாக புறந்தள்ளிவிடமுடியாது. க.பொ.த(உயர்தர) தகுதியுடன் போட்டிப்பரீட்சைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும், தொண்டர் ஆசிரியர்களாக கடைமையாற்றி நிரந்தர ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கும் ஆசிரியப்பயிற்சியளிக்கும் பெருங்கடமையை இவைபுரிகின்றன. இவற்றின் பணியை புறந்தள்ளிவிடமுடியாத அரசு இவற்றை மூடும் எண்ணத்தை கைவிட்டுள்ளது.

## பட்டதாரிஆசிரியர்களுக்கான ஆசிரியபயிற்சிவாய்ப்புக்கள் (Teacher Training for Graduate Teachers)

பட்டதாரிஆசிரியர்கள் பட்டப்பின்படிப்புகல்விடிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதனூடாக அவர்கள் ஆசிரியவாண்மை விருத்தியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அனைத்து பட்டதாரி ஆசிரியர்களும் மிக விரைவாக இக்கற்கைநெறியைப்பூர்த்தி செய்ய விரும்பினாலும், பல்கலைக்கழகங்கள் அவற்றின் பௌதீக, மனித வளங்களிற்கு ஏற்ப குறிப்பிட்ட எண்ணிக்கையானோரை மட்டும் இக்கற்கைநெறிக்கு அனுமதிக்கின்றன. இலங்கை திறந்த பல்கலக்கழகம் அதிகளவானோரை அனுமதித்தாலும் இதிலும் வரையறை உண்டு.

எமது நாட்டின் பல்கலைக்கழகங்கள் கல்வியியற்துறையில் பின்வரும் உயர் பட்டங்களையும் வழங்குகின்றன.

1. Master of Education
2. Master of Philosophy in Education
3. Doctor of Philosophy in Education



## ஆசிரிய நிலையங்கள் (Teacher Centers)

ஆசிரியர்களுக்கு அவர்களின் ஆசிரியவாண்மையை மேம்படுத்தும்வதற்காக, அவர்களின் சேவைக்காலத்தில் பயிற்சியளிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டவைதான் ஆசிரிய நிலையங்களாகும். கல்வி அமைச்சினால் ஒவ்வொரு கல்விவலயங்கள் தோறும் ஒவ்வெரு ஆசிரிய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. அரசுசாரா நிறுவனங்களின் நிதியுதவியுடன் மிகநவீன வடிவமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன.

வசதியான பயிற்சி மண்டபம், நூல்நிலையம், கணணிப்பயிற்சிக்கூடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்கள் பல்வேறு ஆசிரிய தரத்திலானவர் களுக்கும் பல்வேறுபட்ட ஆசிரியபயிற்சிகளை அளிக்கின்றன. அண்மையில் ஆசிரியசேவைக்கு உள்வாங்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு குறுகியகாலப் பயிற்சிகளை திறம்பட வழங்கி இருந்தன. ஆனாலும் பயிற்சி தேவையான அனைத்து ஆசிரியர்களுக்கும் ஆசிரிய பயிற்சி வழங்கக்கூடிய பௌதீகவளம், மனிதவளம், மற்றும் நிதிவளம் என்பவற்றை இவையும் கொண்டிருக்கவில்லை.

## தேசிய கல்வி நிறுவகம் (National Institute of Education)

ஆசிரியர் பயிற்சி வழங்கும் மற்றொரு முக்கிய நிறுவனம் தேசிய கல்வி நிறுவனமாகும். இது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் பிராந்திய நிலையங்களினூடாக கல்விமாணி (B.Ed), பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கைநெறி மற்றும் பல ஆசிரியவாண்மை விருத்திகற்கை நெறிகள் என்பனவற்றை நடாத்துகின்றது. கொழும்பு தலைமை கற்கை நிலையத்தினூடாக மேலும்பல ஆசிரியர் கற்கை நெறிகளை நடாத்துகின்றது.

## பாடசாலையை மையப்படுத்திய ஆசிரியப்பயிற்சி

தற்காலத்தில் ஆசிரியப்பயிற்சியின் நவீனபரிமாணமாக, பாடசாலையை மையப்படுத்திய ஆசிரியப்பயிற்சி விளங்குகின்றது. ஒரு பாடசாலையில் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்குமாக பயிற்சிபட்டறையை அதிபர், பாடசாலையில் ஒழுங்குசெய்து ஆசிரியவாண்மையை விருத்திசெய்தலாகும். தமதுபாடசாலையின் திறமைமிக்க வளஆளணியினருடன், பாடசாலைக்கு வெளியில் இருந்தும் திறமையான வளஆளணியினரை அழைத்து இப்பயிற்சி நெறியை ஒழுங்கு செய்யமுடியும். மாணவர் கற்றல்செயற்பாடு பாதிக்காத வகையில் குறிப்பிட்ட கால ஒழுங்கில் இப்பயிற்சிநெறியை ஒழுங்குசெய்தல் வேண்டும்.

### ஆசிரியர் பயிற்சியில் தனியார்துறை

அண்மைக்காலங்களில் நகர்ப்புறங்களில் பல தனியார் நிறுவனங்கள் ஆசிரியர் பயிற்சிநெறிகளை அறிமுகம் செய்துள்ளன. இவற்றின் சான்றிதழ் பற்றி இன்று பல ஐயப்பாடுகள் இருக்கலாம். ஆனால் நடைமுறையில் பல தனியார் கணணிக்கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட கணினிக்கல்விச்சான்றிதழ்கள் இன்று அரச நிறுவனங் களால் ஏற்றுக்கொள்ளப் படுவதைப்போன்று எதிர்வரும் காலத்தில் தனியார் துறையினரால் வழங்கப்படும் தரமான ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்களை அரசாங்கம் அங்கீகரிக்கும் எனநம்பலாம்.

### ஆசிரியர்கள் சுயதேடல்கள் மூலம்
### தமது தொழில் திறன்களை வளர்த்துக் கொள்ளல்

எந்த ஒரு ஆசிரியர் தனது வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டிருக்கிறாரோ அவரால் தான் திறம்பட தமது தொழிலை செய்யமுடியும். நாளுக்குநாள் உலகில் பல மாற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. தொடர்மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப கற்பித்தல் செய்யவேண்டியதேவை இன்றைய ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. ஆசிரியர் சிறந்த தொடர் வாசகனாக இருக்கவேண்டும். தனது ஆசிரிய தொழில்வாண்மையை விருத்தி செய்ய அத்துறைசார்ந்த நூல்களை வாசிக்க வேண்டும்.

இணையத்தளங்களில் பல புதிய, நவீன ஆசிரியத்தொழில்விருத்தி பற்றிய தகவல்கள் புதைந்துள்ளன. உலகத்தின் பல மூலைகளிலும் பின்பற்றப்படும் சிறந்த பயிற்சிவிருத்தி உத்திகள் பரந்துகிடக்கின்றன. இவற்றின் பயனை எமது ஆசிரியர்கள் முழுமையாக பயன்படுத்தி தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும். Online-Learning முறையில் இணையத்தளங்களினூடாக பல நவீன ஆசிரியர்கள் பயிற்சிநெறிகளினை பின்பற்றி தமதுபட்டங்கள், உயர்பட்டங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

### ஆசிரியர் கல்வியில் நவீன தொழில்நுட்பங்கள்
### (Modern technologies in Teacher Education)

தற்காலத்தில் கற்றல் சூழலில் விரைவாக ஏற்பட்டுவரும் மாற்றங்களினால், ஆசிரியர் கல்வி வழங்கும் சமூகத்தினர் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆசிரியர்களின் அறிவு (Knowledge) திறன்கள் (Skills). மனப்பாங்கு (Attitude) என்பன தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைந்ததாக இருந்தால் மட்டுமே அவர்களால் தற்காலத்தில் வெற்றிகரமான கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடமுடியும்.



இதற்கமைய ஆசிரியர் கல்வி வழங்கும் நிறுவனங்கள் தமது கலைத்திட்டத் திட்டத்தினை தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைந்ததாக முன்னெடுத்து தரமான, நவீன கல்வி உலகுடன் பொருந்தக்கூடிய ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். தற்காலத்தில் ஆசிரியகல்வி நிறுவங்களில் தொழில்நுட்பமானது (Technology) தனியான பாடமாக போதிக்கப்படுகின்றதே அன்றி முழுக்கலைத்திட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதாக இல்லை. இது ஒரு பெரும் குறைபாடாகும்.

### ஆசிரியர் கல்வியில் தொழில்நுட்பத்தை நிறைவேற்றும் படிமுறைகள்
### (Levels in Embedding Technology in Teacher Education)




### கற்பித்தல் சமுதாயத்தினூடாக தொழில்நுட்பம் கடத்தப்படும் முறைகள்
### (Technology transfers to the teaching Community)



## ஆசிரியர்கல்வியில்
## தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதிலுள்ளதடைகள்

1. கிடைக்கக்கூடிய உபகரணங்களின் மட்டுப்பாடு
2. ஆசிரியகல்வி வழங்குபவர்களுக்கு முறையான பயிற்சியின்மை
3. ஆசிரிய கல்வியியலாளர்களிடம், தமது கல்விச் செயற்பாடுகளை தொழில் நுட்பத்துடன் ஒன்றிணைந்ததாக முன்னெடுத்தல் பற்றிய தெளிவான திட்டங்கள் இல்லாமை.
4. நிதிப்பற்றாக்குறை
5. தேவையான உபகரணங்களையும், மென்பொருட்களையும் விருத்தி செய்வதற்கு ஆசிரிய கல்வி வழங்குபவர்களுக்கு போதிய நேரமின்மை
6. சில புதிய தொழில்நுட்பங்களின் கல்விசார் தகுதி (Pedagogical validity) பற்றிய ஐயப்பாடு காணப்படுதல்.
7. ஆசிரியர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தெளிவான இலக்குகள்/ நோக்கங்கள் அற்றிருத்தல்.
8. ஆசிரியர் கல்வி வழங்குவோர் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெறுவோரின் தொழில்நுட்ப அறிவு மிகக்குறைவாக இருத்தல்.
9. ஆசிரியகல்வி வழங்கும் நிறுவனங்களின் தயார்நிலைக்குறைவு.
10. ஆசிரியர்கல்வி கலைத்திட்டத்துடன் ஒன்றிணைக்கப்பட்டதாக தொழில் நுட்பக் கல்வி இல்லாமை.

### முடிவுரை

எமது நாட்டின் மாணவர்களின் கல்விஅபிவிருத்தி ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் தமது தொழில்திறன்களை மேம்படுத்திக்கொள்வதனூடாக தரமான கல்வியை மாணவர்களுக்கு வழங்கமுடியும். பல்வேறுபட்ட ஆசிரியபயிற்சிகளையும் பெற்றுக் கொள்வதனூடா கவும், அதன்படி மாணவர்களுக்கு கற்பிப்பதனூடாகவும் ஒரு ஆசிரியர் இலட்சிய ஆசிரியராக திகழமுடியும். ■

*வீரகேசரி*
*18.04.2006*



# 5

## பாடசாலைகளுக்கான
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி

இன்று உலகமயமாக்கலின் விளைவாகவும், உயர்தொழில்நுட்ப மாற்றங் களினாலும் உலகில் சமூக-பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. நாம் அறிவின் பெருக்கத்தினை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். புதிய உலகப்பொருளாதாரமானது தொழில்நுட்பத்தால் வலிமையாக்கப்படுகின்றது, தகவல்களினால் ஒட்டப்படுகின்றது, அறிவினால் இயக்கப்படுகின்றது.

இன்று தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது, கல்வியியல் மாற்றங்களுக்கும் கல்விச்சீர்திருத்தங்களுக்குமான வலிமையான கருவியாகவுள்ளது. சிறந்த தொழில் வாய்ப்புக்களைக் கொண்ட ஒரு துறையாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்து வருகின்றது. பாடசாலைப்பிள்ளைகள் மத்தியில் கணணிகள் பற்றிய அறிவையும், தகவல் தொடர்பாடல் பற்றிய அறிவையும் திறன்களையும் விருத்தி செய்வதனூடாக எமது நாட்டின் இன்றைய தேவையாகவுள்ள உலகத்தரத்திற்கு ஈடான மனித வளத்தினை உருவாக்கிக்கொள்ள முடியும்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பாடசாலைகள் தொழில்நுட்பவியற்புரட்சிக்கு உட்படுகின்றன. நுண்கணினி அறிமுகஞ்செய்யப்பட்டமை போதனைச் செயன்முறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது கடந்த காலத்தில் அச்சிட்டபொருள் அறிமுகஞ் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியுடன் ஒப்பிடத்தக்கது. இணையத் தொடுப்புடன் கூடியகணினியானது

மாணவர்கள் பாடசாலை வேளையின்போதோ வீட்டிலோ எந்நேரத்திலும் ஆசிரியரின் வழிகாட்டுகையைப்பெறும் சாத்தயக்கூறுகளுடன் சுயமாய் வழிப்படுத்தும் கற்றலில் ஈடுபடுதலைச்சாத்தியமாக்கியுள்ளது.

மாணவர்கள் பல்வேறு வலைக்கடப்பிடங்களை (Website) அடைந்து தேவையான விடயங்கள் பற்றிச்சொந்த முயற்சியில் கற்கலாம். பல்லூடக எறிவைகள் (Multimedia Projectors), CD ROM, வீடியோக்கள், வேறுதொழில்நுட்பவியல் துணைச் சாதனங்கள் ஆகியவை வகுப்பறைப் போதனையின் தரத்தை மேம்படுத்த உதவுகின்றன.

எமது நாட்டின் இன்றைய தேவை, கற்பித்தல் நிலையங்களான பாடசாலைகளை கற்றல்நடைபெறும் இடங்களாக மாற்றிமைத்தலாகும். மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு வசதிசெய்பவராக ஆசிரியர்கள் விளங்கவேண்டும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியானது பாடசாலையின் அனைத்து ஆளணியினருக்கும் முறையாக வழங்கப்படவேண்டும். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நிர்வாக ஆளணியினர் ஆகியோரின் செயற்றிறனை கட்டியெழுப்ப இக்கல்வி அவசியமாகும். போட்டி மிகுந்த உலக சமுதாய சவால்களுக்கு ஏற்ப எமது நாட்டிற்கு தேவையான மனிதவளத்தை இலங்கை யிலும் உருவாக்குவதற்குரிய நடவடிக்கைகளை கல்வியமைச்சு எடுத்து வருகின்றது.

இலங்கையில் பாடசாலை மட்டத்தில் கணனிக்கல்வியானது 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தத்தில் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஒன்றிணைந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Integrated ICT) அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கை கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்விச் சீர்திருத்தத்தில் முக்கிய அம்சமாக விளங்குவது தேசிய தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியாகும் (National ICT Education). இதன் நோக்கம் புதிய கல்விச்சமுதாயத்தின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய உலகத் தரத்திற்கு ஈடான பிரஜைகளை எமதுநாட்டிலும் உருவாக்குவதாகும். 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 வரையிலான ஆறு ஆண்டு செயற்றிட்டம் (Action Plan) ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்செயற்பாட்டுத்திட்டமானது மூன்று படிநிலைகளை கொண்டது.

☞ படிநிலை - 1: 2002-2003
☞ படிநிலை - 2: 2004-2005
☞ படிநிலை - 3: 2006-2007



இச்செயற்றிட்டமானது பின்வரும் பிரதான நோக்கங்களைக்கொண்டது.

☞ கற்றல் - கற்பித்தலில் தகவல்தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் (Use of IT in teaching-learning).
☞ கல்வி அமைப்பை முகாமை செய்வதற்கு தகவல்தொழில்நுட்பத்தை பயன்படுத்தல் (Use of IT in management of the education system)

தேசிய தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி மூன்று பிரிவுகளைக் கொண்டது.

1. பாடசாலை மாணவர்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி.
2. பல்கலை மாணவர்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி.
3. நாட்டின் அனைத்துப் பிரஜைக்குமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி.

பாடசாலைகளுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வியின் நோக்கம் பாடசாலைக்கலைத்திட்டத்துடன் ஒன்றிணைந்த ICT கல்வியை வழங்குவதாகும். பாடசாலைகளுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் பிரிவுகளைக்கொண்டது.

1. க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி.
2. க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி.
3. கனிஸ்ட இடைநிலை மாணவர்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி.
4. ஆரம்பவகுப்புக்களுக்கான தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி.

கல்வி அமைச்சினால் பாடசாலைக்கலைத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ICT கல்வியானது இரண்டு அணுகுமுறைகளைக்கொண்டது. ஒன்று ICT இனை ஒருபாடமாக கற்பிப்பது மற்றயது, கற்றலுக்கும் தகவல்பரிமாற்றத்திற்கும் ஒரு கருவியாக ICT இனைப்பயன்படுத்துவது.

இந்தத்திட்டத்தின் முக்கிய அம்சமாக க.பொ.த உயர்தர 12ஆந் தரத்தில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பொதுப்பாடமாக அறிமுகப்படுத்தப்பட்ட பொதுத்தொடர் பாடல் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம் (General Information Technology-GIT) பாடத்தினைக்குறிப்பிடலாம். முதல்தடவையாக 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ற் 21 ஆந்திகதி, ICT பரீட்சை தேசியரீதியில் இலங்கைப்பீட்சைக்திணைக்களத்தால் நடாத்தப்பட்டது. இப்பரீட்சைக்கு நாடுமுழுவதிலும் இருந்து 80,000 இற்கும் அதிகமான மாணவர்கள் தோற்றி யிருந்தனர். பொதுத்தகவல் தொழில்நுட்ப (ICT) பரீட்சைக்குரிய பாடத்

திட்டங்கள், தகவல்கள், மாதிரிவினாவிடைகள் என்பன ஊடகங்கள் மூலமாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து க.பொ.த சாதாரண வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு தொழில்நுட்பபாடமாக (Technical Subject) அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. கனிஸ்ட இடைநிலை வகுப்புக்களிலும் ( தரம் 6, 9) ஆரம்பவகுப்புக்களிலும் (தரம் 1,5) ICT இனை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான திட்டமிடல் செயற்பாடுகளும் கல்வி அமைச்சினால் செய்துமுடிக்கப் பட்டுள்ளன. இதனுடன் இணைந்ததாக பலவேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. அவையாவன.

☞ ஆசிரியர் பயிற்சி
☞ இலத்திரனியல் கல்வி (Electronic education)
☞ கலைத்திட்ட விருத்தி (Content Development)
☞ ICT மாணவர் சங்கங்கள் (ICT student Association)
☞ வேறுபல உதவும் திட்டங்கள்.

இத்தகைய திட்டங்களுக்கு அரசாங்கம் நிதிவழங்குவதுடன், வேறும்பல உதவும் நிறுவனங்களும் நிதிவழங்குகின்றன்

1. ஆசிய அபிவிருத்தி வங்கி (Asian Development Bank)
2. கல்வி அமைச்சு (Ministry of Education)
3. கல்வி அமைச்சின் இரண்டாம்நிலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (Secondary Education Modernization Project-II, SEMP-II)

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பகல்வித்திட்டத்தினூடாக பின்வரும் அனுகூலங்கள் ஏற்படும் எனஎதிர்பார்க்கப்படுகின்றது.

1. கிராமப்புறங்களுக்கு மின்சாரவசதிகளை வழங்கல், தொலைத் தொடர்பாடல் வசதிகளை முன்னேற்றமடையச் செய்தல்.
2. பாடசாலை மாணவர்களுக்கு கணினி, இணையம் போன்ற புதியதொழில் நுட்பங்களை அறிமுகஞ் செய்தல்.
3. பாடசாலை மாணவர்களது மொழித்திறனை மேம்படுத்தல்.
4. பிராந்திய நிலையங்கள், "சன்னிவேதான பியச" போன்ற நிறுவனங்களினூடாக ICT பாவனை பற்றிய விழிப்புணர் வைக்கட்டியெழுப்பல்.

இலங்கையின் தேசிய தகவல் தொழில்நுட்பக்கல்விக் கொள்கைக்கு அமைவாக, கல்வியமைச்சு பின்வரும் இரண்டு தூரநோக்குகளை இலக்காக கொண்டுள்ளது.



1. இலங்கையின் புதிய தலைமுறையினரை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவுடன்கூடிய வலிமையுள்ளவராக்குதல்.
2. பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் கல்வியில் மாணவர் கற்றலை வளப்படுத்து வதற்கும் ஏற்ற திட்டமிடல், நிறைவேற்றல் மற்றும் ஆதாரமான செயற்பாடுகளுக்கு வசதி செய்தல்.

பாடசாலை சமூகத்தினர் மத்தியில் தகவல் தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தி நவீன உலகுக்கான மாணவர்களை தயார்ப்படுத்தலில் கல்வி அமைச்சு ஈடுபட்டு வருகின்றது. இதற்காக பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியும் மேலும்பல விசேட செயற்றிட்டங்களை அறிமுகப் படுத்தியும் வருகின்றது. இரண்டாம்நிலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டம் (Secondary Education Modernization Project-SEMP) மூலம் இரண்டு கட்டங்களில் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மேற்கொள்ளப் பட்டும் வருகின்றன.

## SEMP-I மூலம் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள்

☞ சிரேஸ்ட இடைநிலைப்பாடசாலைகளில் 1000 கணிணிக்கற்கை நிலையங்கள் நிறுவப்பட்டன.
☞ 480 பல்லூடக நிலையங்கள் (Multimedia Centers) ஸ்தாபிக்கப்பட்டன.
☞ ஆசிரியர்களுக்கு கணிணி உதவியுடன் கற்பித்தல் (Computer Assisted Learning- CAL) தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டது.

## SEMP-II மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

☞ SEMP-I திட்டத்தில் தவறவிடப்பட்ட சிரேஸ்ட இடைநிலைப் பாடசாலை களிலும் கணிணிக்கற்கை நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றது.
☞ மேலும் 2300 பல்லூடக நிலையங்கள் (Multimedia Centers) ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன.
☞ கல்வி வலயரீதியாக மேலதிகமாக 30 கணிணி வளநிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றது.

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA)

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்நிலையம், அரச துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கொள்கைகளை இலங்கையில் நெறிப்படுத்தும் ஒரு முக்கிய அரசநிறுவனமாகும். இந்நிலையத்தினை ஆரம்பித்து வைத்தவர் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களாவார். இந் நிலையமானது ஜனாதிபதி அலுவலகத்தின் மேற்பார்வையில் இயங்கிவருகின்றது.

## பாடசாலைகளில்
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வியின் தற்போதையநிலை

தேசியரீதியில் 137 மாணவருக்கு ஒரு கணிணி என்ற அடிப்படையிலேயே தற்போது பாடசாலைகளில் கணிணி வசதிகள் உள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. நாடாளவிய ரீதியில் தற்போது 17 சதவீதமான பாடசாலைகளில் மின்னஞ்சல் வசதிகளும், 04 சதவீதமான பாடசாலைகளில் இன்ரநெற் வசதிகளும் உள்ளதாக மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இலங்கையில் தேசியபாடசாலைகள் உட்பட நகர்புற பாடசாலைகள் பல கணனி, இணையவசதிகளைப்பெற்றுள்ளன. சிலபாடசாலைகள் நவீன கணிணி ஆய்வு கூடங்களையும் கொண்டுள்ளன. இவை கல்வி அமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை மாணவர்சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள், வெளிநாடுகளில் வதியும் பழையமாணவர்கள், என்போரால் வழங்கப்பட்டவையாகும்.

இத்தகைய பாடசாலைகள் மாணவர்களுக்கான கணனிக்கற்றல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. முறையாகப்பயிற்சிபெற்ற கணனிக்கல்வி கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் பாடசாலையில் இல்லாதிருப்பது தரமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வியை வழங்குதலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினையாகும். இதை உணர்ந்த கல்வி அமைச்சு பட்டதாரி ஆசிரியர்களை, தகவல்தொழில்நுட்பத்தை போதிப்பதற்காக நியமனம் செய்துள்ளது.

சில பாடசாலைகளில் கணிணிகள் இருந்தும் அவை மாணவர்கள் ஆசிரியர்களின் பாவனைக்கெட்டாத காட்சிப்பொருளாகவே இன்னமும் இருக்கின்றன. கிராமப்புற பாடசாலைகள் பலவற்றில் மாணவர்களுக்கு கணனி என்பது பார்வைக்குகூட எட்டாத பொருளாகவே இருக்கின்றது. ஆனால் சில நகர்ப்புற பாடசாலைகளிலும், பணவசதி படைத்த குடும்பங்களின் பிள்ளைகள் கற்கும் பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளிலும் தேவைக்கு அதிகமான கணிணிகள் உள்ளன. இவற்றில் ஒன்றைத்தானும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கு வழங்கி அவர்களையும் தொழில்நுட்ப உலகுடன் இணைக்க இப்பாடசாலைகள் முன்வரவேண்டும்.

அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும், சமூகமும், தனியாரும் கிராமப்புறப் பாடசாலைகளுக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக்கல்வி கிடைப்பதில் கூடியஅக்கறையுடன் செயற்படவேண்டும். ■

உதயன்
*18.04.2006*



# 6

## ஆசிரியர்களும்
## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும்

எமது நாட்டின் எழுத்தறிவுவீதம் உயர்வாக இருந்தபோதும் கணிணி அறிவுவீதம் 10% அளவிலேயே உள்ளது. இது ஏனைய வளர்முகநாடுகளுடன் ஒப்பிடும்போது மிகவும் பின்தங்கிய நிலையாகும். தேசியமட்டத்தில் அரசாங்கப்பாடசாலைகளில் தற்போது கடமையாற்றும் ஆசிரியர்களில் 60 சதவீதமானவர்கள் மட்டுமே கணனி தொடர்பான அறிவினைக்கொண்டிருப்பதாக கல்வியமைச்சு மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வந்துள்ளது. ஆசிரியர்களில் 32 சதவீதமானவர்கள் மட்டுமே கணனி தொடர்பாக மாணவர்களுக்கு போதிக்கக்கூடிய நிலையில் உள்ளனர்.

### ஆசிரியர்களின் வகிபங்கு

மாறிக்கொண்டிருக்கும் சுற்றாடலும், வகுப்பறைக்குள் தொழில்நுட்பவியல் புகுந்தமையும் கற்பித்தல் வாண்மைத்தொழிலின் வகிபாகத்தில் மாற்றம் ஏற்படுவதனை இன்றியமையாததாக்கியுள்ளன. ஆசிரியர் தேவைப்படமாட்டார், மாணவர்கள் தாமாகவே கற்பர் என்ற எண்ணத்தை ஒருவரும் கொண்டிருக்கக்கூடாது. கணினிகள் ஒருபோதும் ஆசிரியரின் இடத்தை எடுக்கமுடியாது. ஆனால் ஆசிரியரின் வகிபாகம் மாறுதல் வேண்டும். அறிவுக்கருவூலமாகக்கருதப்படும் ஆசிரியர் அறிவை வழங்குபவராக இனிமேலும் அமைவதில்லை.

தற்காலக்கல்விப்பழக்கத்தினால் பரிந்துரைக்கப்படுகின்றவாறு ஆசிரியர் கற்றலுக்கு வசதிசெய்பவராக மாத்திரமே அமைவார். அவர் தமது மாணவர்களுக்கு ஆலோசனை அளித்து வழிகாட்டும் அதேவேளை மாணவர்கள் நனகு ஊக்கிவிக்கப்பட்டுத்தாமாகவே கற்பர். ஆனால் ஆசிரியர்கள் தொழில்நுட்பவியலின் பயன்பாடு, அதனைப்பற்றிய அறிவுகாணப்படும் இடங்கள், அறிவைப்பயன்படத்துவதற்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்விதம் என்பனபற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

## ஆசிரிய சமூகத்தின் கணினி அறிவை மேம்படுத்த புதிய இணையத்தளம் (School Net)

ஆசிரிய சமூகத்தினரின் கணினி அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் புதிய இணையத்தளமொன்றினை கல்வியமைச்சு, இடைநிலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தினூடாக ஆரம்பித்துள்ளது. இந்த இணையத்தளத்தின் மூலமாக ஆசிரியர்கள் கணினி தொடர்பான கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத்தேவையான தகவல்களை இலகுவாக பெற்றுக்கொள்ளலாம்.

http:/www.schoolnet.lk/intelteach என்ற இணையத்தள முகவரியூடாக பிரவேசித்து தேவையான் கணிணி அறிவு தொடர்பான நவீன தகவல்களை ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

School Net ஆனது, பெரும்பாலான சிரேஸ்ட இடைநிலைப் பாடசாலை களையும் மற்றும் அவற்றுடன் தொடர்பான நிறுவனங்களையும் இணைத்த பரந்த வலையமைப்பாகும். பாடசாலைக்கல்வியுடன் தொடர்புபட்ட பின்வரும் பயனாளிகளுக்கான தளமாக School Net விளங்குகின்றது

- 1000 பாடசாலைகள்
- 90 கணிணி வளநிலையங்கள்
- 17 தேசியக்கல்வியில் கல்லூரிகள்
- கல்வி அமைச்சு
- 8 மாகாண ICT நிலையங்கள்
- இரண்டாம்நிலைக்கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், முகாமைத்துவ அலுவலகங்கள்.

School Net ஆனது பின்வரும் சேவைகளை வழங்குகின்றது

1. வலையமைப்பு இணைப்பு மற்றும் முகாமை என்பனவற்றுடன் பாதுகாப்பான இணையத் தொடுப்பையும் வழங்குகின்றது.
2. கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான சேவைகளை வழங்குகின்றது.
3. School Net, இனூடுடாக e-learning materials இனைப் பெற்றுக்கொள்ளலாம்.



4. ஆசியர்களும், பாடசாலை கணிணிக்கற்கை நிலையப்பொறுப்பாசிரியர்களும், School Net, இனூடு IP Phone வசதியைப்பயன்படுத்தி ஏனைய பாடசாலைகளுடனும் நிறுவனங்களுடனும் உரையாடலாம்.
5. பாடசாலைகள் தமது இணையப்பக்கங்களை School Net இனூடாக பிரசுரிக்கலாம்.
6. பாடசாலைகளின் விபரங்களை கல்வி வலய, கோட்டரீதியாக School Net இனூடு பெற்றுக்கொள்ள முடியும்.

## இலங்கையில் புது வகுப்பறைக்கற்பித்தல் முறைமைகளை அறிமுகப்படுத்தல்

### 1. புது வகுப்பறை கற்பித்தல் முறைமைகளை அறிமுகப்படுத்துவதற்கான சார்க் சர்வதேச மாநாடு (The SAARC International Conference on Innovative Classroom Practice)

மேற்படி மாநாடு 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்பட்டது. இலங்கை வெளிவிவகார அமைச்சின் சார்க்கிளை மற்றும் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் தேசிய கல்விநிறுவகத்தினால் இம்மாநாடு நடாத்தப்பட்டது.

இது சார்க் பிராந்திய அங்கத்துவ நாடுகளில் வகுப்பறை கற்பித்தலை மேற்கொள்கின்ற ஆசிரியர்களுக்கான மாநாடாகும். இலங்கையின் ஆறு அரசபாடசாலை ஆசிரியர்கள் தமது சொந்த அனுபவங்களை ஆய்வறிக்கை களாக ஆங்கிலமொழியில் சமர்ப்பித்திருந்தனர். ஆய்வறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக பின்வரும் தலைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

- கற்பித்தல் முறைகள் (Instructional practices)
- பரிகார செயற்பாடுகள் (Remedial measures)
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை கல்வியில் பயன்படுத்தல் (Integration of ICT Education)
- பாடசாலையை மையப்படுத்திய மதிப்பீடு (School Based Evaluation)
- பல்தர/ பல்திறமை/ பல்கலாசார வகுப்புக்களில் கற்பித்தல் (Multi- grade /Multilevel/Cross cultural instruction)
- கற்றலுக்கு ஊக்குவித்தல் (Motivation to learning)

### 2. மூன்றாவது வருடாந்த ஆசிய பசுபிக் புத்தாக்க ஆசிரியர்கள் மாநாடு (Third annual Asia-Pacific Innovative Teachers Conference)

டிஜிட்டல் காலத்திற்குரிய கற்பித்தல் முறைகளுக்கு வழிகாட்டும் சிறப்பான தொழில்சார் செயற்பாடுகளை பகிர்ந்துகொள்வதற்காக மேற்படி

மாநாடு 2007 ஆம் ஆண்டு கம்போடியாவில் நடைபெற்றது. 23 நாடுகளிலிருந்தான 250 புத்தாக்க ஆசிரியர்கள் கலந்த கொண்டிருந்தனர். இவர்களில் இலங்கையைச்சேர்ந்த எம்.எஸ்.பி.இராஜபக்ச, என்.பி.லியனகே மற்றும் எச்.ஏ.கே.வசந்த ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

பிராந்தியத்திலுள்ள 7500 பாடசாலைகளிலிருந்து 22000 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர். தேசியரீதியில் வெற்றிபெற்ற ஆசிரியர்களே இலங்கையை பிரதிநிதித்துவம் செய்தனர். இந்தமாநாடு பின்வரும் விடயங்களை வெளிக்கொணர்ந்தது.

- வகுப்பறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உள்ளிணைப்பு.
- நீடித்த கல்வியியல்
- உள்ளடக்கம்
- தரம் மற்றும் வினைத்திறன்
- விஞ்ஞானம் மற்றும் கலாசாரத்தை ஊக்குவித்தல் அதன்மூலம் கல்வியினை அபிவருத்தி செய்து ஸ்திரப்படுத்தல்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் இந்த நிகழ்விலே மூன்று வேறுபட்ட தலைப்புகளிலே மூன்று செயற்றிட்டங்களை படைத்திருந்தனர்.

- நாமலி லியனகேயினது படைப்பானது "Learning English is fun" என்று தலைப்பிடப்பட்டிருந்தது.
- சம்பத் ராஜபக்சவினது படைப்பானது நேரடி விவரணங்களுடன் "Heart structure and Functions" எனத்தலைப்பிடப்பட்டிருந்தது.
- தகவல் தொடர்பாடல் தளத்துடனான கற்கைத்திட்டமான "Foot steps of Heritage" என்ற தலைப்பில் அஜித்குமார படைத்திருந்தார்.

இந்தப்படைப்புக்கள், பிராந்திய புத்தாக்க ஒன்றுகூடலில் வெளிப்படுத்தப்பட்டு ஆசிரிய சமூகத்தினரிடையே சிறந்த செயற்பாடுகளையும் தொழில் நிலையினையும் பகிர்ந்து, அறிவினையும் பகிர்ந்து அடித்தளத்தினை இடுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துகின்றது. ஒவ்வோராண்டும் கல்வி அமைச்சினால் புத்தாக்க ஆசிரியர்களுக்கான போட்டி நடாத்தப்படுகின்றது.

## இன்டெல் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் (Intel Teach Program)

"ஆசிரியர்கள், தொழில்நுட்பத்தை எவ்வாறு அவர்களின் வகுப்பறை கற்பித்தல் செயற்பாடுகளிலும், பாடக்குறிப்பை திட்டமிடலிலும் ஒன்றிணைத்தல் மற்றும் பயன்படுத்தல்" தொடர்பாக அவர்களுக்கு கல்வியூட்டல் திட்டமொன்றினை இன்டெல் கூட்டுத்தாபன தலைவர் கிறைக்பாறெட் (Craig Barbet) என்பவர் அறிவித்தார்.



அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச்சேர்ந்த பத்து மில்லியன் ஆசிரியர்கள், இவரின் இலக்கு குழுவாகும். இதன்மூலம் ஒரு பில்லியன் மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. "கணிணிகள் வித்தைகாட்டிகளல்ல அவை ஆசிரியர்கள்" என்ற நம்பிக்கைக்கு, இன்டெல்லின் இந்த உலகளாவிய ஆசிரியவாண்மைவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது உரமூட்டுவதாகவுள்ளது. வகுப்பறைக்கற்றல் சூழலில் தொழில்நுட்பக்கருவி களையும் வளங்களையும் எப்படி, எப்பொழுது மற்றும் எங்கே கூட்டிணைக்க வேண்டும் என்பதுபற்றி ஆசிரியர்கள் புரிந்துகொள்ள இன்டெல் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டம் உதவிபுரியும். அத்துடன் ஆசிரியர்கள், தமது மாணவர்களுக்கு பகுத்தறிவு சிந்தனை, பிரச்சினை விடுவித்தல், கூட்டாக செயற்படும் திறன் மற்றும் வெற்றிக்கான தயார்படுத்தல் என்பனபற்றி போதிக்கக்கூடியதாக இருக்கும். இந்தநிகழ்ச் சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் தற்போதுவரை 40 நாடுகளைச்சேர்ந்த நான்கு மில்லியனுக்கும் அதிகமான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உலகளாவிய நிகழ்ச்சித்திட்ட ஒப்பந்தத்தில் இலங்கை கல்வி அமைச்சும் கைச்சாத்திட்டுள்ளது. இதன்மூலம் பல்வேறு செயற்பாடுகள் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அவையாவன,

- கல்வி அமைச்சில் கடமையாற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கல்
- வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கான பயிற்சி வழங்கல்
- ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயிற்சி வழங்கல்
- பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சி வழங்கல்
- ஆசிரியர்களுக்கான பயிற்சி (Master teachers & Participant teachers)

இன்டெல் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டமானது மேற்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலேயே இதுவரை இலங்கையில் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய மாகாணங்களுக்கும் எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்றிட்டத்தின் மூலம் இலங்கையில் எதிர்பார்க்கப்படும் முன்னேற்றங்களாவன.

- புத்தாக்கத்திற்கான அடிப்படையை இது வழங்கும்.
- தடைகளை உடைத்தெறியும்.
- ஆசிரியர் மீது மாணவரின் நம்பிக்கையை அதிகரிக்கச்செய்யும்.

**முடிவுரை:**

பாடசாலை கல்வியுடன் தகவல் தொழில்நுட்பம் வேகமாக பின்னிப்பிணைந்து செல்கிறது. இதற்கேற்ப கல்விசார் ஆளணியினர் தம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக ஆசிரிய சமூகத்தினர் இதில் சிரத்தை எடுக்க வேண்டியுள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் ஆசிரியர்களுக்கு சில புதிய விடயங்களை தெரியப்படுத்து வதாகும். இது தொடர்பாக பல தகவல்கள் இணையத்தளங்களில் பரவிக்கிடக்கின்றன. அவற்றினையும் உள்வாங்கி மாறும் உலகுடன் ஆசிரியர்கள் தம்மையும் மாற்றிக்கொள்ள வேண்டும். ■

# 7

## கல்வித்தொழில்நுட்பமும் கற்றல் – கற்பித்தல் செயற்பாடும்

கல்வித்தொழில்நுட்பம் என்பது ஒரு பரந்த பாடத்துறையாகும். இது உளவியல், தொடர்பாடல் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கும். கல்வித்தொழில்நுட்பம் எனப்படுவது பல்வேறு கட்புல-செவிப்புல சாதனங்களை மட்டும் குறிக்கின்றது என்ற கருத்து நிலவுகின்றது இது தவறானது, கல்வித்தொழில்நுட்பத்தின் உபபிரிவாக/உபதொடையாகவே கட்புல-செவிப்புல சாதனங்கள் அமையும்.




**கல்வித்தொழில்நுட்பமானது பின்வரும் இயல்புகளைக்கொண்டது:**

- கல்வியின் உள்ளீடு (Input), வெளியீடு (Output), மற்றும் செயற்பாட்டு (Process) விடயங்களை உள்ளடக்கியது.
- வினைத்திறன்மிக்க கற்றலுக்கான கற்றல் முறைகளையும் கற்பித்தல் நுட்பங்களையும் விருத்திசெய்தலை வலியுறுத்துகின்றது.



- கல்வியிலும் பயிற்சியிலும் விஞ்ஞானபூர்வமான அறிவின் பிரயோகத்தினை வலியுறுத்துகின்றது.
- கல்வியின் இலக்குகளை அடைவதற்காக கற்றல் நிபந்தனைகளை ஒழுங்கமைத் தலை இது உள்ளடக்கும்.
- போதனையை வடிவமைத்தலையும் கற்றற்புலப்பாடுகளை மதிப்பிடலையும் இது வலியுறுத்துகின்றது.
- கல்வித்தொழில்நுட்பமானது சூழல், ஊடகங்கள் (Medias) என்பவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கற்றலுக்கு வசதிசெய்யும்.

### கல்வித்தொழில்நுட்பத்தின் வகிபங்கு (Role of Educational Technology)

1. கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் ஒட்டுமொத்தமான வினைத்திறனை அதிகரிக்க கல்வித்தொழில்நுட்பம் உதவிபுரியும்.
2. கற்றலின் தரத்தை அதிகரிக்கச்செய்யும்.(Increasing the quality of learning).
3. ஆசிரியரின் வினைத்திறனை அதிகரிக்கச்செய்யும். (Increasing the efficiency of teacher)
4. தரத்தில் எதுவிதபாதிப்பும் ஏற்படாவண்ணம், செலவீனங்களை குறைவடையச் செய்யும். (Reducing costs, without affecting quality).
5. கற்போனின் சுயாதீனத்தன்மையை/தங்கியிராத்தன்மையை அதிகரிக்கச் செய்யும். (Increasing the independence of learners).
6. கல்வி, பயிற்சி வழங்குதலில் நெகிழ்ச்சித்தன்மையை அதிகரிக்கச்செய்யும்.
7. தொடர்பாடல் செயன்முறையின் எல்லாவிடயங்களையும் மேம்படுத்த உதவும்.

### கல்வித்தொழில்நுட்பத்தினைப்பயில்வதனூாக ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளும் திறன்கள்

கல்வித்தொழில்நுட்பத்தினைப்பயில்தனூாக ஆசிரியர்கள் பின்வரும் திறன்களினை பெற்றுக்கொள்ளமுடியும்.

- கற்றலில் இனிமைச்செயல்களைக்கையாள முடியும்.
- விலைமலிவான கற்றல் கருவிகளை தயாரிக்க முடியும்.
- கரும்பலகையை முறையாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்தும் திறனைப் பெற்றுக்கொள்ளலாம்.
- எளிய கருவிப்பெட்டிகளை தயாரிக்க முடியும்.
- கல்வி நுட்பவியல் கருவிகளை பயன்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்குரிய திறன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ வரைபடங்கள், விளக்கப்படங்கள், மாதிரிகள் தயாரித்தல்.

☞ வானொலி, தொலைக்காட்சி கல்வி ஒலி, ஒளிபரப்புக்களைப்பயன்படுத்த முடியும்.

☞ நவீனத்தொடர்புகளை பயன்படுத்த முடியும்.

☞ கணனியைப்பயன்படுத்தி உரைகள், வாழ்த்து அட்டைகள், அழைப்பிதழ்கள், அட்டவணைகள், வரைபடங்கள்,மற்றும் நழுவங்களை தயாரிக்க முடியும்

☞ ஒலி, ஒளி மற்றும் கல்விக்குறுவட்டுகளைப்பயன்படுத்த முடியும்.

☞ நழுவங்கள் (Slides), தலைமேலெறிகருவி (O.H.P) தாள்கள் தயாரித்து பயன்படுத்த முடியும்.

☞ இணையத்தில் உலவி, இணையத்தளங்களைப்பார்வையிட மற்றும் மின்அஞ்சல்களை தயாரித்த அனுப்பிப்பெறுலாம்.

## கல்வித்தொழில்நுட்பம் என்பது ஒரு தொகுதியாகும்
## (Educational technology as a system)

கல்வித்தொழில்நுட்பத்தின் அணுகுமுறைகளில், தொகுதி அணுகுமுறையும் ஒன்றாகும். தொகுதியானது பின்வரும் கூறுகளை/ மூலங்களைக் காண்டது (Elements).

☞ ஆசிரியர் (Teacher)

☞ மாணவன் (Student)

☞ போதனைக்கான நிகழ்ச்சிநிரல் (Program me of Instruction)

தொகுதியின் கூறுகளிடையில் /மூலங்களிடையில் குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் இடைவினை (Interaction) காணப்படும். அத்துடன் இம்மூலங்கள் ஒன்றிலொன்று தங்கியிருக்கும். தொகுதி அணுகுமுறையானது வன்பொருள் (Hardware) பகுதியையும் மென்பொருள்பகுதியையும் (Software) கொண்டது. கல்வியில் தொகுதி அணுகு முறையானது பின்வரும் படிமுறைகளைக்கொண்டது.

1. போதனைக்குறிக்கோள்களை வரையறுக்கவும் அவற்றை அடைவதற்கு மான, சிறப்புக்குறிக்கோள்களை உருவாக்குதல்.
2. இந்தக்குறிக்கோள்களை அடைவதற்கான பொருத்தமான ஊடகங்களை (Mediae) தெரிவுசெய்தல்.
3. கற்போனுடைய இயல்புகளையும் தேவைகளையும் வரையறுத்தல்.
4. வினைத்திறனான கற்றல் நடைபெறுவதற்காக, பொருத்தமான கற்பித்தல் முறையைத் தெரிந்தெடுத்தல்.
5. கிடைக்கத்தக்க தெரிவுகளில் இருந்து பொருத்தமான கற்றல் அனுபவத்தை தெரிவுசெய்தல்.



6. தேவையான, பொருத்தமான கருவிகளையும், உபகரணங்களையும் தெரிவுசெய்தல்.
7. ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உதவும் ஆளணியினருக்குரிய (Supportive staff) பொருத்தமான கடமைகளை ஒதுக்கல்.
8. நிகழ்ச்சியை நிறைவேற்றல். (Implementing program me).
9. மாணவர்கள் அடைவை உண்மையான குறிக்கோள்கள் சார்பாக மதிப்பிடல்.
10. மாணவர் கற்றலை மேம்படுத்துவதற்காக, தொகுதியின் செயற்பாட்டை மீள்பார்வை (Revising) செய்தல்.

## கல்வித்தொழில்நுட்பத்தின் கூறுகள்
## (Components of Educational Technology)

கல்வித்தொழில்நுட்பமானது பின்வரும் கூறுகளைக்கொண்டது,

1. கற்கும்பாணி (Leaning style)
2. கற்பித்தல் முறைகள் ( Teaching strategies)
3. வளங்களின் உருவாக்கம் (Resource Generation)



## கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டின் தொகுதிமாதிரி
(System Model of the Teaching-Learning Process)




## மாணவர் – மைய அணுகுமுறை
(Student - Centered approach)




■

அகவிழி
ஏப்பிரல் 2008



# 8

## கட்டுருவாக்க கற்றல் கொள்கை

கற்றல் எனப்படுவது மனிதனின் அனுபவத்தின் விளைவாக அவனது நடத்தையில் ஏற்படும் நிரந்தமான மாற்றமாகும். இன்னொரு வகையில் குறிப்பிடுவதானால்; கற்றல் எனப்படுவது புதிய அறிவு, புதிய திறன்கள், மற்றும் புதிய மனப்பாங்குகளைப் பெற்றுக் கொள்வதாகும்.

கற்றல் தொடர்பாக பல்வேறு கோட்பாடுகள், காலத்திற்குக் காலம் பல்வேறு உளவியல் அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன; தற்கால ஆராய்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கம் பெற்றும் வருகின்றன. கற்றல் கொள்கைகள், ஆசிரியர்கள் கூடிய வினைத்திறனுடன் செயலாற்றவும், கற்றல் புலப்பாடுகளை சரியாக மதிப்பிடவும் உதவி செய்யும். பிரதானமாக பின்வரும் நான்கு வகைகளாக கற்றல் கொள்கைகளைப் பாகுபடுத்தலாம்.

1. நடத்தைவாதக் கற்றல்க் கொள்கை (Behaviorist learning theory)/ தூண்டி - துலங்கல் கற்றல் கொள்கை (Stimulus - Response learning theory)
2. கள - அறிகை கற்றல் கொள்கை (Field - Cognitive learning theory)
3. மானிடப்பண்புக்கொள்கை (Humanistic learning theory)
4. கட்டுருவாக்க கற்றல் கொள்கை (Constructivist learning theory)

## கற்றல் கொள்கைகள் தொடர்பான எண்ணக்கருப்படம்

(Concept map of learning theories)




### கட்டுருவாக்க கற்றல் கொள்கை

காலத்துக்குக் காலம் ஒவ்வொரு கற்றல் கொள்கைகள் பயன்பாட்டின் அடிப்படையில் முன்னுரிமை பெறுகின்றன. அண்மைக்காலம் வரை நடத்தை உளவியலின் செல்வாக்கு கல்வியில் அதிகமாகக் காணப்பட்டது. இதற்கமைவாகவே பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டன. ஆசிரியர்கள் பாடக்குறிப்பை இதற்கமைய திட்டமிட்டு வகுப்பறையில் நிறைவேற்றினர். தற்போது நடத்தைவாதத்திற்குப் பதிலாக கட்டுருவாக்க சிந்தனை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுருவாக்கவாதம் ஒன்றும் புதியதல்ல; யோன்டுயியினால் (John Dewey) வலியுறுத்தப்பட்டது. மரியா மொண்ரிசூரி (Maria Montessori) அம்மையாரின் கல்விமாதிரி (Educational Model), கட்டுருவாக்க வாதத்தினை அடிப்படையாகக் கொண்டது. கற்றல் மற்றும் அறிகை (Cognition) சார்ந்த கோட்பாடுகளில் முன்னோடி வாய்ந்த அறிஞர்கள் பலர் கட்டுருவாக்க சிந்தனை தொடர்பான பல ஆய்வுகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். அவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்க அறிஞர்களாவர்.



1. ஜீன் பியாஜே (Jean Piaget)
2. ஜெறோம் புரூனர் (Jerome Bruner)
3. லெவ் விகொற்ஸ்கி (Lev Vygotsky)
4. எலினர் டக்வேர்த் (Eleanor Duckworth)
5. ஜோர்ச் கீன் (George Heine)
6. ஹாவார்ட் கார்ட்னர் (Howard Gardner)

கட்டுருவாக்க கற்றல் கொள்கையானது, தற்கால ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு விருத்தியடைந்துகொண்டு செல்கின்றது. இக்கொள்கை பின்வரும் தத்துவங்களை உள்ளடக்குகின்றது.

- அறிவானது, கற்போனின் அனுபவத்திலிருந்து கட்டியெழுப்பப்படுகின்றது. (Knowledge is constructed from the experience of the learner,)
- கற்றல் எனப்படுவது, உலகைப்பற்றிய கற்போனின் சொந்த வியாக்கியானமாகும். (Learning is a personal interpretation of the world)
- கற்றல் எனப்படுவது அனுபத்திலிருந்து கருத்துருவாக்கப்படும் வினைத்திறன் மிக்க செயற்பாடாகும். (Learning is an active process of making from experience)
- கற்றலில் பிரதிபலிப்பு என்பது முக்கிய பகுதியாக அமைகின்றது. (Refection is an essential part of learning)
- தற்கால கட்டுருவாக்க கற்றல் கொள்கைப்படி, கற்றல் எனப்படுவது எண்ணக் கருவித்தி (Conceptual Development) எனப்படும்.
- தமது அறிவுக்கும், புரிந்துணர்வுக்கும் ஏற்ப தமது கற்கும் முறைமையை மாணவர்கள் தெரிந்தெடுக்கின்றனர்.
- கட்டுருவாக்கவாதம் அறிவின் கட்டுருவாக்கத்தை குவியப்படுத்தியதே ஒழிய, அறிவின் பிரதியெடுத்தல்/ மீள் உருவாக்கத்தையல்ல (Reproduction)
- குழந்தையானது உண்மையாகக் கற்கவேண்டிய விடயங்களை

## கட்டுருவாக்கக் கற்றல் சூழலை வடிவமைத்தலுக்கான மாதிரி

(Model for Designing Constructivist Learning Environment)




கட்டுருவாக்கக் கொள்கை குவியப்படுத்துகின்றது.

### கட்டுருவாக்கத்தின் அடிப்படையில் அமைந்த கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டின் போது வகுப்பறையில் பிரயோகிக்கப்படும் சொற்றொடர் பிரயோகங்கள்

(Phrases Used to describe what is happening in Constructivist Classrooms)

- ☞ பூரணத்துவமான/ முழுமையான மொழி (Whole language) பிரயோகம்.
- ☞ கண்டாராய்ந்தறிதலுடன் இணைந்ததான கணிதம் (Mathematics incorporating discovery Learning)
- ☞ உண்மை உலகிற்கு செவிசாய்த்தல் (Real Wold audiences)
- ☞ சகபாடிகளின் விமர்சனம் (Peer review)
- ☞ மாணவர்கள் கூட்டாகச் செய்யும் செயற்றிட்டங்களில் ஒத்துழைத்துக் கற்றல். (Corporative levering where students naturally Collators ate on projects)
- ☞ கலைத்திட்டமானது பரந்துபட்ட விடயங்களை குவியப்படுத்தியது (Curriculum focused on broad - based themes)
- ☞ சுயமதிப்பீடு (Self evaluation) இடம்பெறும்.

8418 c.c



- ☞ கற்றலுக்காக மாணவரால் விருத்தி செய்யப்பட்ட திட்டங்கள் (Student - developed plans for learning)
- ☞ மாணவர்கள் வினத்திறன்மிக்க கற்போர்கள் (Students as an active learners)
- ☞ ஆசிரியர் கற்றலுக்கு வசதி செய்பவராவார். (Teacher as facilitator)
- ☞ உண்மையான செயற்பாடுகள் (Authentic activities)
- ☞ சகபாடி ஒத்துழைப்புக் குழுக்கள் (Peer support groups)
- ☞ உயர்மட்டச் சிந்தனைத்திறன்கள் (High level thinking skills)
- ☞ வாழ்க்கை நீடித்த கல்வி (Life - long learning)
- ☞ ஆசிரியர் எப்போதும் கற்போனாக இருப்பார். (Teacher as a learner)

### கட்டுருவாக்கவாதக் கற்றல்க் கொள்கைக்கும், நடத்தைவாதக் கற்றல்க் கொள்கைக்கும் இடையிலான ஒப்பீடு



## கட்டுருவாக்வாதமும் 5E கற்றல் மாதிரியும்

5E மாதிரி ஒரு கற்றல் அணுகுமுறையே ஆகும். கற்றல் தொடர்பான தத்துவரர்த்த சிந்தனையாக கட்டுருவாக்கவாத சிந்தனை விளங்குகின்றது. மாணவர்மையக் கற்றலினை உறுதிசெய்யும் வகையில் இந்த 5E மாதிரி அணுகுமுறை காணப்படுகின்றது. வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்கள் சுயமாக பாட அகுகளையும புதிய விடயங்களையும் விளங்கிக் கொள்வதற்கான ஒரு பயனுறுதிமிக்க மாதிரியுருவாக இது காணப் படுகின்றது. இந்த 5E மாதிரி, கற்றல் வட்டப்போதனை மாதிரி (Learning Cycle instructional Model) எனவும் அழைக்கப்படுகின்றது.

றொகர் பைபீ (Roger Bybee) என்பவரின்தலைமையிலான உயிரியல் விஞ்ஞான கலைத்திட்டக்கற்கைக் குழுவினரால் (Biological Science Curriculum Study) கட்டுரு வாக்கத்திற்கான 5E மாதிரி ஆரம்பத்தில் விஞ்ஞான பாடத்துடன் தொடர்புபட்டதாகவே அறிமுகஞ் செய்யப்பட்ட போதும், இதன் சிறப்பான பெறுபேறுகளினால் ஏனைய பாடங்களுக்கும் இதன் பிரயோகம் பரவாக்கப் பட்டதுடன் பலநாடுகள் தமது கலைத் திட்டங் களிலும் இதனை அறிமுகப் படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்போது பரந்தளவில் கல்வித் துறைகளில் 5E மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 7E மாதிரிகளும் உருவாக்கப்பட்டு பிரயோகிக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

| கட்டுருவாக்கவியல் சிந்தனையின் அடிப்படையில் விருத்தி செய்யப்பட்ட 5E | |
|---|---|
| 1. Engage | - ஈடுபடுதல்/ தொடர்புபடுத்தல் |
| 2. Explore | - கண்டறிதல்/ தேடியறிதல் |
| 3. Explain | - விளக்குதல் |
| 4. Elaborated | - விரிவுபடுத்தல் |
| 5. Evaluate | - மதிப்பிடல் |

| 5E மாதிரியை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 7E மாதிரி | |
|---|---|
| 1. Excite | - தூண்டல் |
| 2. Explore | - கண்டறிதல் |
| 3. Explain | - விளக்குதல் |
| 4. Expand | - விரிவுபடுத்தல் |
| 5. Extend | - பரவலாக்குதல் |
| 6. Exchange | - பரிமாற்றல் |
| 7. Examine | - பரீட்சித்தல் |



பயனுறுதிமிக்க கற்றல் சூழலினை ஏற்படுத்துவதற்காக 5E மாதிரியினை ஆசிரியர்கள் பயன்படுத்திப் பாடத்திட்டமிடலை மேற்கொள்ளலாம். இதன் பொருட்டு கற்றல் விசாரணைகளையும் செயற்பாடுகளையும் ஒவ்வொரு E க்கு கீழும் ஒழுங்காகத் திட்டமிடல் அவசிய மாகின்றது. ஒவ்வொரு விசாரணையும் செயற்பாடுகளும் தனித்துவமானதாகவும் தேவை என்று கருதும்போது அறிமுகஞ் செய்வதற்கு ஏற்ற வகையிலும் வடிவமைக்கப் பட்டிருத்தல் அவசியம்.

## கட்டுருவாக்கமும் அதில் ஆசிரியர் வகிபாகமும்

(Teacher role in the construstivist settings)

பண்டைக்காலம் முதல் வகுப்பறைகளில் பரவலாக நடைமுறைப் படுத்தப்பட்ட மரபுரீதியான ஒருவரிலிருந்து மற்றொருவருக்கு கடத்தும் வகிபாகமும் (Transmission role) பிற்பாலத்தில் அறிமுகப்படுத்தப் பட்ட பரிமாற்ற வகிபாகமும் (Transaction role) இன்றுவரை வகுப்பறைகளில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றன. பாடசாலைகளில் இருந்து விலகும் பிள்ளைகளின் சிந்தனைத்திறன், தனியாள்த்திறன், சமூகத்திறன் என்பன தொடர்பில் இன்று காணப்படும் பின்னடைவை கருத்திற் கொள்ளும் போது கற்றல் - கற்பித்தல் முறையில் அபிவிருத்தி ஏற்பட வேண்டியமை பற்றியும் அவ்வாறு ஏற்பட வேண்டிய முறைகள் பற்றியும் இனங்காண்பது சிரமமானதன்று.

கடத்தல் வகிபாகத்தின் போது (Transmission role) மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தையும் தெரிந்த ஒருவராக ஆசிரியர் கருதப்படவதுடன் மாணவர்கள் அவற்றிலெதுவும் தெரியாதவர்கள் எனக்கருதி அவர்கள் மீது அறிவைக்கடத்தல் என்பது ஆசிரியரின் பணியாக அமைகின்றது. ஆசிரியரிடமிருந்து மாணவர்கள் பக்கமாக மட்டும் ஒரு வழித்தொடராக அறிவு பிரவாகிக்கும் விரிவுரை அமைப்பைப் பெறும்இந்த கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களின் தனிப்பட்ட அல்லது சமூகத்திறனை விருத்தி செய்வதற்கும் கூட போதிய பங்களிப்பை வழங்குவதில்லை.

பரிமாற்று வகிபாகத்தின் (Transactional role) ஆரம்பக்கட்டத்தின் போது ஆசிரியர் வகுப்பு மாணவர்களுடன் உரையாடல் நடத்துவார். ஆசிரியரிடமிருந்து மாணவர்களுக்கும், மாணவர்களிடமிருந்து ஆசிரியர்களுக்கும் செலுத்தப்படும் கருத்துக்களுக்கு மேலதிகமாக மாணவர்களிடையேயான இடைத்தொடர்பும் விருத்தியடைவதால் இது ஒரு கலந்துரையாடல் நிலைக்கு மாறுகின்றது. தெரிந்ததிலிருந்து, தெரியாததிற்கும், எளிமையில்இருந்து சிக்கல் நிலைக்கும், தூலநிலையில் இருந்து நியமநிலைக்கும் மாணவர்களைக் கொண்டு செல்வதற்காக ஆசிரியர் தொடர்ந்தேச்சியாக வினாவுதலில் ஈடுபடுவார்.

கட்டுருவாக்க பின்னணியில் தேர்ச்சியமையக்கல்வி (Competency based education) முக்கியத்துவம் பெறுகின்றது. தேர்ச்சி மையக் கல்வியில் மாணவர் செயற்பாடு முக்கிய இடம் வகிப்பதுடன், வகுப்பறையிலுள்ள அனைத்துப் பிள்ளைகளும் தேர்ச்சி தொடர்பான குறைந்தபட்சம் பாண்டித்திய மட்டத்தை நெருங்கிய நிலைக்கேனும் கொண்டு வருவதில் ஈடுபாடு காட்டும் ஒரு வளவாளரின் (Resource Parson) நிலைக்கு ஆசிரியர் ஆளாகின்றார். இங்கு ஆசிரியரது வகிபாகம் நிலைமாற்றும் வகிபாகம் (Transformational Role) என அழைக்கப்படுகின்றது. இவ்வகிபாகத்தில் ஆசிரியரின் பணிகள் வருமாறு;

☞ கற்றலுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் வசதியுடன் கூடியதான ஒரு கற்றல் சூழலைத்திட்டமிடல்.

☞ மாணவர்கள் கற்றுக்கொள்ளும் முறையை நெருக்கமாத நின்று அவதானித்தல்

☞ மாணவர் வலிவு நலிவுகளை இனங்காணல்,

☞ தேவையான உடனூட்டல்களையும், பின்னூட்டல்களையும் வழங்கி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தலுடன் வகுப்பறைக்கு வெளியேயும் கற்றலை விஸ்தரிப்பதற்குப் பொருத்தமான உபகரணங்களைத் தயாரித்தல்

**முடிவுரை:**

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் கட்டுருவாக்க சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. புதிய சீர்திருத்தத்திலும், அதனை நடைமுறைப்படுத்தலிலும் சில சிரமங்கள் எதிர்நோக்கப் படுகின்ற போதிலும் இது வினைத்திறன் மிக்கதாகவே உள்ளது. கட்டுருவாக்க சிந்தனையின் பின்னணியில் ஆசிரியர்கள் தொழிற்பட வேண்டுமாயின் கற்பித்தலுக்காக கற்க வேண்டிய கடப்பாட்டுக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுகின்றனர். எனவே, ஆசிரியர்கள் தமது தொழிலைச் செய்வதற்கு புதிய மாற்றத்திற்கு உட்பட வேண்டியவராக உள்ளனர். ■

**உசாத்துணைகள்**


1. விஞ்ஞானப் பாடத்திட்டம் - 2007, தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.
2. நவாஸ்தீன் ப.மு, வகுப்பறைக்கற்றல் கற்பித்தலுக்கான புதிய தோர் அணுகுமுறை 5நு மாதிரி, அகவிழி (மே 2006)
3. Matusevich. M. N (1995), School Reform : what Role can Technology Playin a Construtivist Setting? Montgomery
4. Http ://tiger. thiocyanate 1/ Portfolios/ imagoes theory. gif.
5. Http;//www.personal.psu edu/ faculty/ s/ j/ sjm 256/ portfolio/ kbase/ Thories & Models/ Constructivism / Constructvst Diagram. JPG.




# 9

## தரம் –5 புலமைப்பரிசில் பரீட்சை;
## சில அவதானிப்புக்கள்

அண்மைக்காலமாக தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையின் நம்பகம் (Reliability), தகுதி (Validity) பற்றி பல்வேறு தரப்பாலும் வினா எழுப்பப்பட்டு வருகின்றது. இப்பரீட்சை மாணவர்களின் முழுத்திறமையையும் மதிப்பிடுகிறதா? என்றால் இல்லை. இப்பரீட்சைக்கு மாணவர்கள், பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் வழங்கும் அதீத முக்கியத்துவத்தால் அவர்கள் பல்வேறு உளவியல் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். யப்பான் நாட்டிற்கான கல்விச்சுற்றுலா வாய்ப்பு, பல்வேறு வங்கிகள், நிறுவனங்களின் பணக்கொடை என்பனவும் இப்பரீட்சையின் மீதுள்ள கவனத்தை அதிகரித்துள்ளது.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பற்றி பல்வேறு கல்வியியலாளர்களும் பல்வேறு கோணங்களில் விமர்சித்துள்ளனர். யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கல்வியியல் துறை பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்கள் இப்பரீட்சை பற்றி குறிப்பிடும்போது.

"அன்று புலமைப்பரிசில் பரீட்சைகள் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புகளுக்கான வாயில்களைத்திறக்கும் பரீட்சைகளாகவே இருந்தன. இன்றைக்கு அப்பரீட்சைகள் மாணவர்களுக்கு உளநெருக்கீடுகளை ஏற்படுத்தும் பரீட்சைகளாக மாறியுள்ளன. ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் மாணவர்களின் ஆற்றலை வெளிக் கொணரப் போதுமானவையாக

அமையவில்லை என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. மாணவர்கள் மத்தியில் இப்பரீட்சை பதற்றத்தை ஏற்படுத்துவதாகவே பெரிதும் காணப்படுகின்றது. இந்தபுலமைப்பரிசில் பரீட்சை எமது பிரதேசத்தில் பாடசாலைகளுக் கிடையில் ஒரு போட்டியை உருவாக்கியுள்ளது. அதிபர்களும் ஆசிரியர்களும் முடிந்தவரை மாணவர்களை இப்பரீட்சையில் சித்தியடையவைக்க எத்தனிக்கின்றனர்."

(உதயன், 13-12-2005)

இப்பரீட்சைபற்றி யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா குறிப்பிடுகையில்: "ஐந்தாம்தர புலமைப்பரிசில்பரீட்சை, இன்று அது ஆரம்பித்த நோக்கத்திற்கு மாறாக, மாணவர்களின் எதிர்பார்ப்புகளிற்கு மாறாக, முழுநேரப்புத்தகக் கல்வியாகிவிட்டது. இதனால், உளவளர்ச்சி, நடையுடைபாவனை பாதிப்படைய ஏதுவாகின்றது. இதுபற்றிப் பெற்றோர்களும் கல்விச்சமூகமும் சிந்திக்கவேண்டியுள்ளது. தற்போதைய கல்விமுறை காரணமாக மாணவர்கள், நண்பர்களுடன் அளவளாவ, விளையாட்டில் பங்குபற்ற நேரம் இல்லை. இது சீர்செய்யப்பட வேண்டும்"

(உதயன், 15-11-2005)

ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட்சையினால் கல்விசார் அனைத்துச் சமூகத்தினரும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர்.

### 1) மாணவர்கள் எதிர்நோக்கும் உளத்தாக்கங்கள்

மாணவன் தரம் - 4 இனை அடைந்தவுடனேயே பாடசாலை, வீடு, பிரத்தியேக வகுப்புக்கள் என்பவற்றால் அவன் மீது "ஸ்கொலஸ்சிப்" அழுத்தம் பிரயோகிக்கப் படுகின்றது. மாணவனின் விளையாட்டு, பொழுதுபோக்கு அம்சங்கள் என்பன புறக்கணிக்கப்படுகின்றன. தினமும் வீட்டில் குவியும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்களுக்கு விடை எழுதுவதே பிள்ளைக்கு போதும் போதும் என்றாகிவிடும். போதாக்குறைக்கு வெகுசனப்பத்திரிகைகள் தமக்குள்ளும் ஒவ்வொரு வினாத்தாள்களை வீட்டுக்குள் கொண்டுவரும். அம்மாணவனைப்பற்றி அக்கறையாக விசாரிக்கும் எவரும் "ஸ்கொலசிப் இந்தவருசமா வாறவருசமா" என்ற முன்னுரையுடனேயே உரையாடலைத்தொடங்குவர். பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களும் தமது பாடசாலையின் இலக்கை இந்த இளம் பிஞ்சுகளைக்கொண்டே அடைவதற்காய் பிள்ளைகளைப் பாடாய்ப்படுத்து கின்றனர். வீட்டில் எந்நேரமும் "படி, படி" எனப்பெற்றோரின் அழுத்தம், இத்தனைக்கும் அகப்படும் மாணவர்கள் பல்வேறு உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.



### 2) அதிபர், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

ஒவ்வொரு வருடமும் ஒரு பாடசாலையில் இருந்து, மீத்திறனுள்ள மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவார்கள் என்று கூறமுடியாது. ஆனால் அயல்பாடசாலைகளுடன் கடுமையாக போட்டியிடவேண்டும் என்பதற்காக தமது மாணவர்களை, மாணவர்களின் இயல்புக்கு மீறி தூண்டுகின்றனர். இதில் தோல்வியடைந்தவுடன் அதிபர், ஆசிரியர்கள் கவலையடைகின்றனர். பாடசாலைப்பரீட்சைப்பெறுபேறுகள் குறைந்தவுடன் ஆசிரியர்கள் அதிபரால் நெருக்கீட்டிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதன்விளைவாக ஆசிரியர்களின் வினைத்திறன் குறைந்து செல்கின்றது.

### 3) பெற்றோர்கள் எதிர்நோக்கும் உளநெருக்கீடுகள்

பெற்றோர்கள், தமது அயலவர்களின், அலுவலக சகாக்களின் பிள்ளைகளைவிட தமது பிள்ளைகள் சிறந்த பெறுபேற்றைப்பெறவேண்டும் என்பதற்காகவும், தாம் அடையாத இலக்குகளை தமது பிள்ளைகளைக்கொண்டு அடைவதற்காகவும், தமது பிள்ளைகள் மீது அதிகமாக அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றனர். பிள்ளைகள் சித்தியடைத்தவறும் பட்சத்தில் பெற்றோர்கள் மனதால் சோர்வடைவதுடன், தம்பிள்ளைகள் மீது வெறுப்பும் அடைகின்றனர்.

### ஐந்தாம்தரப்புலமைப்பரிசல் பரீட்சை பரீட்சிக்கும் திறன்களின் போதாமை

முன்னைய காலத்தில் புலமைப்பரிசில் பரீட்சையானது மாணவர்களின் மொழியறிவு மற்றும் நுண்மதி என்பனவற்றை மட்டும் மதிப்பிட்டது. தற்காலத்தில் பரீட்சையானது பல்வேறுபட்ட திறன்களையும் மதிப்பிடுகின்றது. அவையாவன:

1) மொழியறிவு (Language skills)
   (i) தமிழ் மொழியறிவு (ii) ஆங்கில மொழியறிவு (iii) சிங்கள மொழியறிவு
2) நுண்ணறிவு/ நுண்மதி (Intelligence)
3) பொது அறிவு (General knowledge)
4) வாழ்க்கைத்திறன்கள் (Life skills)
5) ஆரம்பவிஞ்ஞான அறிவு (Basic science knowledge)
6) கிரகித்தல் (Comprehension)
7) சூழல் தொடர்பான அறிவு (Knowledge about Environment)
8) வரலாறு (History)

மேற்கூறப்பட்ட திறன்களை ஐந்தாம்தரப்புலமைப்பரிசில் பரீட்சை பரீட்சிக்கின்ற போதும், தரம் - 5 மாணவனின் உடல்வளர்ச்சி வயது (Chronological age), உளவயது (Mental age) என்பவற்றின் எல்லைக்கு அப்பாற்பட்டும் வினாக்கள் வினாவப்படுகின்றன. உயிரியல் தாவரங்கள், விலங்குகள் என்பன மாணவன் நேரடியாகப்பார்த்து அறிந்த வற்றைப்பற்றி வினாவுதலே சிறந்தது. ஆனால் இன்று மாணவர்கள் அவற்றைப்புகைப் படங்களில்/ கோட்டுப்படங்களில் மட்டும் பார்த்து, அவற்றின் பெயர்களை மிகுந்த சிரத்தை எடுத்து மனனஞ்செய்து பரீட்சை எழுதவேண்டியுள்ளது.

## பாடசாலைமட்ட கணிப்பீடுகளும் சேர்க்கப்படவேண்டும்

தற்காலப்புதிய கல்விச்சீர்திருத்தத்தில் க.பொ.த(சாதாரணதரம்), க.பொ.த(உயர்தரம்) இறுதிப்பரீட்சைகளுக்கே பாடசாலைமட்டக்கணிப்பீடுகளின் புள்ளிகள் சேர்க்கப் படுகின்றன. அதேபோன்று மாணவனின் தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையிலான பாடசாலைமட்டக் கணிப்பீட்டுப்புள்ளிகளும் புலமைப் பரிசில்பரீட்சைப்புள்ளிகளுடன் சேர்க்கப்படவேண்டும்.

இதேபோன்று பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் (Co-curricular activities) திறன்களும் உள்ளடக்கப்படவேண்டும். இயன்றவரை இப்பரீட்சையானது மாணவனது முழுஆளுமைத்திறன்களையும் (Students' whole personality skills) உள்ளடக்கக்கூடியவாறு மேம்படுத்தப்பட்டாலே, தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையானது, நம்பகமும் (Reliability) தகுதியும் (Validity) உள்ளதாக கருதப்படும். ■

*அகவிழி*
*ஏப்பிரல் 2007*



# 10

# பரீட்சைக்குத் தயாராவதற்கான சில அடிப்படைக் குறிப்புக்கள்

அண்மைக்காலமாகக் குடாநாட்டு மாணவர்களின்பரீட்சைப் பெறு பேறுகள் பெருமளவு வீழ்ச்சி அடைந்துள்ளன. இதற்காக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன. இவற்றினைப் பற்றியே தொடர்ந்து விமர்சித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இவற்றில் இருந்து எவ்வாறு மீளலாம். எமது மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளை எவ்வாறு உயர்த்திக் கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

## உணவு முறையில் கவனம் தேவை

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் தமது உடல் நலத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பரீட்சைக்குத் தயாராகும் காலத்தில் அல்லது பரீட்சைக்காலத்தில் நோய்கள் ஏற்படும் பட்சத்தில் அவர்களால் திருப்திகரமான முறையில் பரீட்சை எழுத முடியாதிருக்கும். இக்காலத்தில் பெற்றோர்கள், பிள்ளைகளின் நலத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இக் காலத்தில் பிள்ளைகள் நன்றாகச் சமிபாடு அடையக்கூடிய உணவுகளை சமைத்தவுடன் உண்ணவேண்டும். நாள்பட்ட உணவுகள், எண்ணெய் உணவுகள் போன்றவற்றைத் தவிர்த்தல் நன்று. பரீட்சைக்குக் கடுமையாகப்படிக்கும் மாணவர்களின் உடலை நாம் அவதானித்தோமேயானால், அவர்கள் நாளிற்குநாள் மெலிந்து செல்வதை

அவதானிக்கலாம். இதனைத் தடுக்க சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். குறிப்பாகச் சத்துப்பானங்களை மூன்று வேளைகள் அருந்துவது நல்லது. இதற்காக விலை உயர்ந்த பானங்கள் தான் வேண்டும் என்பதில்லை. பாரம்பரிய உணவு முறைகளும் சிறப்பானவையே.

படிப்பதற்குப் பொருத்தமான அமைதியான சூழல் உருவாக்கப் பட்டிருத்தல் அவசியம். படிக்கும் மேசையிலும் புத்தக அலுமாரியிலும் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் என்பன மிக நேர்த்தியாக அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நன்கு வெளிச்சமுள்ள, காற்றோட்டமான இடத்தினைப் படித்தலுக்காகத் தெரிவுசெய்தல் வேண்டும். படிக்கும் மேசையில் வைக்கப்படும் மின் விளக்கு அல்லது கை விளக்கை படிக்கும் மாணவரின் கண்களைப் பாதிக்காதவாறு தெரிவுசெய்தல் வேண்டும். பரீட்சைக்குத் தயாராகும் மாணவரைக் கொண்டு வீட்டு வேலைகளைச் செய்வதை இயலுமானவரை குறைத்துக் கொள்ள வேண்டும்.

### வீட்டில் உள்ளோர் ஒத்துழைக்க வேண்டும்

மாணவர் படித்துக் கொண்டிருக்கும் போது வீட்டில் இருப்பவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதும், வானொலியைச் சத்தமாக வைத்திருப்பதும் தவறு. இவை பரீட்சைக்குத் தயாராகும் மாணவரின் மனநிலையைப் பாதிக்கும். சில குறிப்பிட்ட நேரங்களில் ஒளிபரப்பாகும் செய்திகளை அனைவரும் ஒன்றாக இணைந்து பார்க்கலாம். இது பரீட்சார்த்தி நடை முறையிலுள் உலக, உள்நாட்டு நிலைவரங்களை அறிந்து கொள் உதவும். தற்போது எல்லாப் பரீட்சை வினாத்தாள்களிலும் நடைமுறை அரசியல், விஞ்ஞானம், கலை கலாசார நிகழ்வுகள் உள்ளடக்கப் படுகின்றமையைக் காணலாம். அத்துடன், இந்தச் சிறு ஓய்வு தொடர்ச்சியாக படித்துக்கொண்டிருக்கும் மாணவன் ஒருவித மன இறுக்கத்திற்கு உள்ளாவதில் இருந்து விடுபட உதவும். மாணவன் பரீட்சைக்குத் தயாராகும் காலத்தில் பெற்றோர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்வதும் ஏனைய பிள்ளைகள் முரண்பட்டுக்கொள்வதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

பரீட்சைக்குத் தயாராகும் மாணவரின் மனதில் உளவியல் ரீதியாக ஓர் இறுக்கநிலை தோன்றும். இதனைத் தடுப்பதற்கு அவரை அடிக்கடி உற்சாகப்படுத்த வேண்டும். "நீ நன்றாகப் படிக்கின்றாய்", "நீ சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வாய்" என்பனபோன்ற மனதிற்கு நம்பிக்கையூட்டும் வார்த்தைகளால் அவரை உற்சாகப்படுத்த வேண்டும்.



படிக்கும் நேரத்தைத் திடமாக வரையறுத்துக்கொண்டு அதனை ஒழுங்காகத் தினமும் நடைமுறைப் படுத்தவேண்டும். அதிகாலையிலேயே எழுந்து படிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். நன்றாகப் பல்துலக்கி, குளிர்ந்த நீரில் முகம்,கை,கால்களைக் கழுவிக் கொண்டால் தூக்கக்கலக்கம் மறைந்துவிடும். இறைவனைக் கும்பிட்டு மனதினைப் படிக்கும் மனநிலைக்கு கொண்வரவேண்டும். சுடுபானம் ஒன்றை அருந்தியபின் படிக்கத் தொடங்கலாம். மனனம் செய்ய வேண்டியவை காலைப் பொழுதில் நன்றாக மனதில் பதிந்து கொள்கின்றன. பெற்றோரும் அதிகாலையில் எழுந்து படிக்கும் பிள்ளைக்குச் சுடுபானம் தயாரித்துக் கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

### படிக்கும் நேரம்

தினமும் சகல பாடத்திற்கும் சம முக்கியத்துவம் கொடுத்து படிக்க வேண்டும். சிலவேளையில், தான் பின் தங்கிய நிலையில் உள்ள பாடங்களிற்குக் கூடியநேரம் ஒதுக்கிப்படிக்கலாம். கடந்தகால வினாக்களிற்கு விடையளித்துக் பழக்குவதன் மூலம் பரீட்சையைச் சுலபமாக எதிர்கொள்ளலாம். கடந்தகால வினாக்களுக்கும் கொடுக்கப் பட்ட பரீட்சைப் புள்ளியிடல் திட்ட விடைகளை நன்றாக விளங்கிப் படித்து கொள்ள வேண்டும். விடைகளைத் திருப்பத் திரம்ப எழுதிப் பார்க்க வேண்டும். இவ்வாறு எழுதிப் பழகினால் தான், பரீட்சையிலும் விடைகள் எழுதுவது இலகுவாக இருக்கும். பரீட்சை எழுதும் போது மாணவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனை குறிப்பிட்ட கொடுக்கப்பட்ட நேரத்துள் விடை எழுதமுடியாமை என்பதாகும். இதனைத் தவிர்ப்பதற்குக் கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு குறிப்பிட்ட நேரத்துள் விடை எழுதிப்பழக வேண்டும்.

### முன்னேற்பாடுகள்

பரீட்சை நாள்களின் முன் இரவுகளில் கடுமையான நீண்டநேரம் கண்விழித்திருத்தலைத் தவிர்க்க வேண்டும். இது அடுத்தநாள் பரீட்சை எழுதும்போது இடையூறு களை ஏற்படுத்தலாம். பரீட்சை அனுமதி அட்டையில் தனக்குரிய பாடங்கள் எந்தெந்த நாள்களில் எந்தெந்த நேரங்களில் நடைபெறுகின்றன என்பதை நன்றாக விளங்கிக் கொண்டு குறித்துக் கொள்ள வேண்டும். வீட்டிலுள்ள குடும்ப அங்கத்தவர்களும் இதில் கவனம் செலுத்தவேண்டும். பரீட்சைக்கு அரை மணித்தியாலம் முன்னதாகவே பரீட்சை மண்டபத்தைச் சென்றடைதல் வேண்டும். பரீட்சைக்குச் செல்லும் போது ஆலயங்களிற்குச் சென்று இறைவழிபாடு செய்யலாம். இது மனதினை ஒருமுகப்படுத்த உதவும்.

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை வினாத்தாள் வழங்கப்பட்டதும் முதலில் வினாத் தாளை இரண்டு தடவையேனும் நன்றாக வாசித்து விளங்கிக் கொண்டு விடையளிக்கத் தொடங்க வேண்டும். விடைத்தாளில் தனது சுட்டிலக்கத்தினைத் தெளிவாக எழுத வேண்டும்.. விடைகளை எழுதும்போது தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும். விடைகளைத் திருத்தும் பரீட்சகர், விளங்கிக் கொள்ளக்கூடியதாக் மொழி நடை எழுத்துக்கள் என்பன தெளிவாக இருக்க வேண்டும் பல்தேர்வு வினாக் களிற்கு விடை அளிக்கும் போது விடைத்தாளின் மறுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அதற்கேற்ப விடை அளிக்க வேண்டும். விடை அளித்துக் கொண்டிருக்கும் போது நேரத்தினையும் கவனித்துக் கொண்டு விடை அளிக்க வேண்டும்.

வினாக்களினைத் தெளிவாக விளங்கிக் கொண்டு அதற்கேற்ப விடை எழுத வேண்டும். கட்டாயமாக விடையளிக்க வேண்டிய வினாக்களை கவனிக்க வேண்டும். விடையெழுதிய பின்னர் விடைத்தாள்களினை வினா ஒழுங்கின்படி அடுக்கித் தரப்பட்ட நூலால் கழராதவாறு கட்ட வேண்டும். ஒவ்வொரு தாளிலும் சுட்டெண் இடவேண்டும் விடை எழுதிய பின்னர் மீண்டும் ஒருதடவை அவற்றினை வாசித்துப் பார்த்துப் பிழைகளைத் திருத்த வேண்டும்.

இவை எல்லாம் பரீட்சைக்குத் தயாராகும் சில வழிமுறைகள். இவற்றிற்கு மேலாகக் கடுமையான முயற்சியும் திறமையும் உங்களிற்கு பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டித்தரும். ■

**உதயன்**

***15.03.2004***



# 11

## கல்வி என்பது என்ன? - சில நவீன சிந்தனைகள்

"கல்வியே செல்வம்", "கல்வியே கருந்தனம்", எனக்கல்வியின் பெருமை பேசப்படுகின்றது. "கற்றல் நன்றே கற்றல் நன்றே பிச்சைபுகினும் கற்றல் நன்றே" என்னும் வரிகள் கற்றலை வலியுறுத்துகின்றன. வாழ்விலே மனிதன் ஆன்மீக நெறியில் பக்குவமடையவும் உலகியல் வாழ்வில் சிறப்படையவும் கல்வி தேவை. சீரான கல்வியைப் பெற்றுக்கொண்ட சமூகமே உன்னத நிலையை அடையமுடியும்.

கல்வி என்பது என்றும் ஒரு படித்ததாகவே இருக்குமொரு பொருளன்று. அதன் இயல்பும் பொருண்மையும் இடையறாது மாறிக் கொண்டே வரும். பற்பல காரணிகள் இணைந்து அதற்கு கட்டுக்கோப்பும் கருத்தும் தருகின்றன. அது வளர்ச்சியடைந்துவரும் ஒரு சமூகத்திலே இயல்பாகக் காணப்படும் நுண்ணறிவு, சமயம், அரசியல், சமூகம், பொருளாதாரம் என்னுமிவை சார்ந்த பல சக்திகள் தனித்தனியே தாக்குவதாலும் ஒன்றையொன்று தாக்குவதாலும் உண்டாகும் விளைவாகும்.

நாகரிக முன்னேற்றத்துக்கு ஏற்ப மக்களின் நடத்தைக்கோலம், சிந்தனை, தேவை ஆகியன மாறிவருகின்றன. சமூகம் மேன்மேலும் சிக்கலாக வளர்கின்றது; சமூகத்தேவை களை உருவாக்குவதும் அவற்றால் உருவாக்கப்படுவதுமான கல்வியை அச்சமூகச் சட்டத்தினுள்ளே செயற்படுவதாகக் கருதும்போதே முற்றாக விளங்கிக் கொள்ளலாம்.

கல்வி என்பது ஒருவரை அவரது கல்விசார் துறையில் மட்டுமல்லாது அவரது வாழ்க்கையின் இதர பல துறைகளிலும் ஆக்கபூர்வமாக ஏற்படுத்தி, அவர்கள்தாம் வாழ்வில் பெரும்பகுதியை கட்டுப்படுத்த உதவி, அவர்கள் வாழ்க்கைத் தரத்தையும் ஈற்றில் முழுச்சமூகத்தையும் மேம்படுத்த வேண்டும்.

செப்பமாகக்கருக்கொண்ட கல்வி முறையானால், அது தனிமனிதன் எவ்வித முற்கோட்டமுமன்றி, தன்னையும் சமூகத்தையும் விளங்கி, வளரத்தக்கவகையில் அவனிடம் அகக்கட்டொழுங்கை வளர்ப்பதாக மட்டுமன்றி, "யாதுமூரே யாவரும் கேளீர்" என்ற கோட்பாட்டிலும் அவனுக்கு அச்சொணா நம்பிக்கை ஊட்டுவதாகவும் இருத்தல் வேண்டும். ஒரு சிறந்த கருத்துடைய கல்வி முறையானது,

☞ தனிமனிதனது உலகியல் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்;
☞ நாட்டின் சமூக பொருளாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டும்;
☞ ஒவ்வொருவரினதும் உள்ளத்தை உயர்த்துவதற்கு உவந்த ஆன்மீகச் சூழலை உருவாக்கித்தருதல் வேண்டும்.

### அறிவாளி / கல்வியியலாளன் எனப்படுபவன் யார்?

அறிவாளி ஒருவர் மதிப்பும் செல்வாக்கும் கொண்டிருந்தும் மனிதாபிமான முறையில் மனித இனத்தோடு தொடர்புறாதுவிடின் அவரது செல்வாக்கு, அறிவு என்பன பூரணத்துவம் பெறாது.

### பொருத்தமான கல்வி (Appropriate Education)

உலக நாடுகள் ஒவ்வொன்றும் அபிவிருத்திக்கான உத்திகளைக் கண்டறிய முனைந்தவண்ணமுள்ளன. நாட்டுக்குப் பொருத்தமான உத்தியை உருவாக்கக் கூடிய தகைமைகளைக்கொண்டோர் திடீரெனத்தோன்றிவிடுவதில்லை. நாட்டின் கல்வி யூடாகவே திறமைமிக்கோர் உருவாகமுடியும். கல்விக்கொள்கை வகுப்போர், கல்விக் கொள்கைகளை அமுற்படுத்துவோர் யாவரும் இது குறித்து விசேடகவனஞ் செலுத்த வேண்டியது அவசியமாகும். மேலும் "மனித முதலீடு" என்னும் எண்ணக்கருவுக்கு அமைய கல்விக்காகச் செலவிடப்படும் பணம் ஒரு முதலீடாகவே கருதப்படும்.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கலைத்திட்டங்களில் மேலைத்தேய கலாசாரத்தின் செல்வாக்கு படிப்படியாக ஊட்டப்படுகின்றது. உதாரணமாக பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொடர் தொழில் ஆற்றுப்படுத்தல் சேவையில் (Career guidance) பெரிய கம்பனிகளில் நுழைவு உன்னதங்கள் பற்றி விளக்கப் படுகின்றதேயன்றி இலங்கையின் மூலவளங்களின் பயன்பாட்டை முன்னெடுக்கும் தொழில்கள் பற்றியும் விளக்குதல் வறிதாகவுள்ளது. ஆங்கில அறிவுக்கும் தகவல் தொழில்நுட்ப அறிவுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம், இலங்கையின் வளம்சார் தொழில்களுக்கும் சமூகநீதிக்குமுள்ள தொடர்புகளுக்கு வழங்கப் படுவதில்லை.



நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச்செய்யும் நிலையங்களே பல்கலைக் கழகங்களாகும். பல்கலைக்கழகங்கள் நாட்டுக்கலா சாரங்களையும் மாணவர்களிடையே அறிவையும் உத்தமபண்புகளையும் வளர்ப்பதாக இருப்பதோடு சிறந்த தரம்படைத்த ஆராய்ச்சி நூல்களை வெளியிடும் நிலையங்களாகவும் விளங்குதல் வேண்டும். அத்துடன் இவை காலத்தோடு இணைந்தும் செயற்பட வேண்டும்.

### கல்வியைப்பெறுதல் மற்றும் வழங்குதல் என்ற சமூகக்கடமை

கல்வி மேம்பாட்டுக்காக சமூகம் ன்றும் இன்றும் பல எத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. கல்விப்பயிற்சிக்குரிய காலம் இளமைப்பருவம். எனவே சிறுவயதில் இருந்தே கல்விப்பயிற்சி பெறவேண்டியது இளைஞர்கடன். கல்வியைப்பெறுவது, இளைஞர், சிறுவரின் சிறப்புரிமையாகும். ஆகவே தமது பிள்ளைகளுக்கு கல்விகற்கும் சந்தர்ப்பத்தை அளிக்காத பெற்றோரும் மற்றோரும் தவறு செய்ததாகவே கருதப்படுவர். பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைப்பெற்றுக்கொடுப்பதற்கு பெற்றோர்கள் ஒருபோதும் பின்நிற்கக்கூடாது.

கல்வியின் மூலமாகவே எதிர்காலத்தில் பொருளாதாரம் உட்பட அனைத்து துறைகளிலும் அபிவிருத்தியை அடையமுடியும். அதற்கேற்ப மாணவர்கள் கல்வியை அக்கறையுடன் கற்கவேண்டும்.

சமூகத்தில் நிலவுகின்ற சீர்கேடுகளை களையவும் சமூகத்திற்கு தேவையான நல்ல பிரசைகளை உருவாக்க அதிபர் உட்பட ஆசிரியர்கள் கல்வியை மாணவர்களுக்கு சிறந்த முறையில் வழங்குவதுடன் இவர்களின் சகல செயற்பாடுகளிலும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் உன்னிப்பாக இருக்க வேண்டும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் மிகுந்த சக்தியாக அமைவது கல்வியே. ஒருவனுக்கு அறிவு, ஞானம் கிடைக்கின்ற போதுதான் கூடவே நல்ல பண்புகளும் ஆழுமையும் ஒழுக்கமும் வளர்கின்றது. ■

84180 C



யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் கல்விமாணி - கற்கைநெறி முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட போது. திரு. ஆ. நித்திலவர்ணன் அவர்கள் முதலாவது அணியில் கல்வி கற்று முதன்நிலை மாணவராக சித்திபெற்றார். அத்துடன் தனது கல்விமுதுமாணி - கற்கைநெறியையும் யாழ். பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்துள்ளார். தற்போது யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையில் உதவிவிரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

கல்விப்புலம் சார்ந்த பாடத்துறைகளில் பரந்த அறிவைக் கொண்டிருக்கும் இவர் தன்னை ஒரு ஈடுபாட்டுடன் கூடிய கல்விசார் ஆளணியினராக விருத்தி செய்து கொண்டுள்ளார். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களினதும், பட்டப்பின்கல்வி டிப்ளோமா பயிலும் ஆசிரிய மாணவர்களினதும் வாண்மைவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் இளம் கல்விசார் வளவாளராக உள்ளார்.

இவரின் திறமையான கல்விசார் செயற்பாடுகளினூடாக பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் அறிவைப் பரப்புதலில் பங்களிப்புச்செய்யும் ஒருவராகவும் உள்ளார்.

இவரது கல்விசார் கட்டுரைகள், சிறுகதைகள் மற்றும் கவிதைகள் தேசிய பத்திரிகைகளிலும், பிராந்திய பத்திரிகைகளிலும் பல்வேறு சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இவரின் ஆக்க எழுத்துக்கள் எமது நாட்டின் பண்பட்ட வாசகர்களினால் பாராட்டப்படுகின்றது.

**பேராசிரியர் சபா. ஜெயராசா**
தலைவர்.
கொழும்புத்தமிழ்ச்சங்கம்.

3